விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 21 வெள்ளிக்கிழமை (06.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261

# நவநீதம்பிள்ளைக்கு ஐ.நா பூரண ஆதரவு

## ஐ.நா. பேச்சாளர் தெரிவிப்பு

**இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐ.நா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் பர்ஹான் ஹக், மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும் மதிப்பளிக்க வேண்டியது அவசியமெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

(19ஆம் பக்கம் பார்க்க)



## மூவினமும் மோதுவதே ஆட்சியாளரின் விருப்பம்

### ஜே.வி.பி. தெரிவிப்பு

மக்கள் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் மோதிக்கொள்ள வேண்டும் என்ற தேவையே ஆட்சியாளர்களுக்கு இருப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார். அவர் மேலும கருத்து வெளியிடுகையில்,

முஸ்லிம் மக்களே பிரச்சினைகளுக்கு காரணம் என்ற தோற்றத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதேபோல் சிங்களவர்களே தமது பிரச்சினைகளுக்கு காரணம் என்ற தோற்றத்தை முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தினர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் நிலைமைக்கு கொண்டு வந்து (19ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் விபத்து

### சிப்பாய் பலி; 40 பேர் வரை காயம்



ஆனையிறவுப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இராணுவச்சிப்பாய் பலியானதுடன் எழுவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சுமார் 40 பேர் வரையில் சிறு காயங்களுக்குள்ளானதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.15 மணியளவிலேயே இடம்பெற்றுள்ளது.

யாழ்.பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பேருந்து, உழவு இயந்திர தண்ணீர் பவுஸருடன் மோதியே (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையுடன் சீனா அச்சத்தில் இந்தியா!

(கொழும்பு)

இந்தியாவின் பின்வாசலாக உள்ள இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீட்டை கவலைக்குரிய விடயமாக இந்தியா எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கொள்கை ஆய்வு மையத்தின் தேசிய பாதுகாப்பு கற்கைகளுக்கான ஆய்வுப் பேராசிரியர் பாரத் கர்நாட் தெரிவித்துள்ளார்.

நொய்டாவில் உள்ள அமிதி பல்கலைக்கழக சட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் நிகழ்த்திய உரையிலேயே அவர் இவ்வாறு கூறி

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தளபதியின் கட்சியும் வடக்குத் தேர்தலில் போட்டி!

### மனோ கணேசன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் கட்சியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

யாழ்.கிறீன் கிராஸ் ஹோட்டலில் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் வரவிருந்த 50 கிலோ ஹெரோயின்!

### மீட்கப்பட்டதால் தப்பியது யாழ்ப்பாணம்

கொழும்பில் அண்மையில் கைப்பற்றப்பட்ட பிறவுண் சுகர் ஹெரோயின் போதைப் பொருளில் 50 கிலோ கிராம் போதைப்பொருளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தற்பொழுது இலங்கையில் தப்பிச் சென்றுள்ள சர்தாஸ் என்பவர், கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரஜையான ஜமாலிடம் இதனைக் கூறி (19ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

## முல்லைத்தீவில் யுவதியின் சடலம்

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவிலுள்ள நீராவிப்பிட்டியில் 21 வயதான யுவதி ஒருவரின் சடலம் வீட்டிலிருந்து நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லோகேந்திரன் நிஸானி என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தனித் தமிழீழம் உருவாக இலங்கையில் வாய்ப்பில்லை

### சுப்பிரமணியன் சுவாமி நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 'ஈழம்' என்ற தனிநாடு உருவாக வாய்ப்பில்லை என இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரும் கடும்போக்கு தமிழ்த் தேசிய எதிர்ப்பாளருமான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற இராணுவக் கருத்தரங்கில் உரையாற்றும் போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கையில் தனிநாடு அமைக்கப்பட (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதம்

## அச்சு இயந்திர இயக்குநர் தேவை

எமது சமாச பதிப்பகத்தில் உள்ள 'கோட்'. கமடா வகை இயந்திரங்களை இயக்குவதில் அனுபவம் உள்ள இயந்திர இயக்குநர் தேவைப்படுகின்றார்கள்.
பகுதிநேரம் வேலை செய்ய விருப்பம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் அனுபவம் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 14.09.2013

**தொடர்புக்கு:**
**பொது முகாமையாளர்,**
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
இல.52, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 5072


# புனித பாப்பரசர் இலங்கை வரமாட்டார்

(கொழும்பு)

உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான புனித பாப்பரசர் வணக்கத்திற்குரிய முதலாவது பிரான்ஸிஸ் ஆண்டகை இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார் என இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

புனித பாப்பரசர் இந்த வருட இறுதியில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அவர் இலங்கைக்கு இந்த வருடம் விஜயம் செய்யமாட்டார் என இலங்கை கத்தோலிக்க திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ அழைப்பை அடுத்து புனித பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்ய விருப்பம் வெளியிட்டிருந்தார்.

பாப்பரசருக்கு அதிகளவான இறைபணிகள் இருப்பதாகவும் மேலும் சில நாடுகளுக்கு செல்ல வேண்டிய தேவைகள் இருப்பதாலும் திட்டமிட்டபடி அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் அடுத்த வருடம் அதாவது 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வாய்ப்பிருப்பதாகவும் கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது. (எ-11)

# சின்மயா மிஷனின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகையின் அனுசரணையுடன் யாழ்.சின்மயா மிஷனால் ஒழுங்கு செய்யப்பட்ட **இந்துவாக வாழ்வோம்** செயற்றிட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான பரிசுப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதால் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-5)


## யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றம்



### மகாகவி பாரதி விழா-2013

(தொடக்கம் 1983)

| | |
|---|---|
| இடம் | : யாழ்ப்பாணக் கல்லூரி "ஒட்லி" மண்டபம் |
| காலம் | : 11.09.2013 புதன்கிழமை |
| காலை | : 9 மணி |
| தலைப்பு | : "விட்டு விடுதலையாகி நிற்பாய்" |
| வாழ்த்துரை | : திரு.நோயல்.அ.விமலேந்திரன் (J.P) (கல்லூரி அதிபர்) |
| பிரதம விருந்தினர் | : திரு.கனகரத்தினம் சுகாஷ் (L.L.B) (இளம் சட்டத்தரணி) |

**பாரதி பாடல்கள், நடனம், நாடகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் வழங்கும் வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழ் மன்றம்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை. (சி-4614)



## துருக்கி வேலை அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்

(துருக்கி ஐரோப்பிய யூனியனில் உள்ள ஓர் நாடு)

* ஆண், பெண் இருபாலாருக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

**WORK PERMIT VISA**

* புதுப்பித்துக் கொள்ளக்கூடிய இரண்டு வருட வேலை ஒப்பந்தம்
* மாதாந்த சம்பளம் *690 Euro (690 x 180 = 124,200/=)*

**வேலை: பொதி செய்தல் (Packing Section)**

* மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்

(வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து சட்டரீதியான பயணம்)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**முன்பதிவுகளுக்கு மட்டும் : 0214921831, 0214921832**

**அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்,**
**இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.** (3378)



## மக்கள் சேவை சிறக்க
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### சாமஸ்ரீ தேசஜோதி
### ஏ.என்.எஸ். திருச்செல்வம் ஜே.பி

இலங்கை முழுவதற்குமான சமாதான நீதவானாக நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் நியமிக்கப்பட்டு, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்து கொண்ட திருச்செல்வம் கல்வி, கலை, கலாசார, சமய, சமூக சேவைகளும் ஆற்றிய தியாகம் மிக்க சேவைகளை கௌரவித்து பாராட்டி அகில இன நல்லறவு ஒன்றியமும் **'சாமஸ்ரீ தேசஜோதி'** பட்டமளித்து தேசிய மட்ட உயர் விருதையும் வழங்கி இருந்தது. பத்திரிகைத் துறையில் 35 வருட சாதனைகள் நிகழ்த்தியமையை கௌரவித்தும் விருது பெற்றுள்ளார். இன்னும் பல சாதனை விருதுகளைப் பெற்று இவரின் மக்கள் சேவைகள் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு அவரைப் பாராட்டி வாழ்த்துவதிலும் மகிழ்ச்சி அடைகின்றோம்.



தினகரன் வாரமலர் ஆசிரியர் எஸ். செந்தில்வேலவர்



வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன்

(C-4615)

அ. செல்வநாயகம் குடும்பம்,
ஈஸ்வரி நகையகமும், பணியாளர்களும்.



**HND/DIPLOMA ACCOUNTING & FINANCE**

**BUSINESS MANAGEMENT** Graduate Diploma /HND

CTH CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

Hotel Management
Diploma / Advanced Diploma



**Basic English for the Real World**




Spoken English
IELTS English
Teacher Training
English for work

**IT and computing courses**

ICDL International Computer Driving Licence
CIW
CompTIA A+

**Web Design /Multimedia /Computer Hardware**

* வெளிநாடுகளில் உயர்கல்வி வசதிகள்
* இலங்கையில் வேலைவாய்ப்புக்கள்
* முதல் 100 மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில்கள்

# London Business College

116, Palaly Road, Jaffna **0775301299 0212217105**

Vathiri Road, Uddupiddy Jucntion, Uddupiddy

கொழும்பு யாழ்ப்பாணம் கிளிநொச்சி வடமராட்சி

# வெளிநாட்டு கடனை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியில் தாண்டவமாடுகின்றனர்

## ஜயந்த கெட்டகொட எம்.பி.தெரிவிப்பு

இலங்கையின் தலைவர்கள் வெளிநாடுகளில் கடனை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியான மனநிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாக சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தெரிவித்தார். புத்தளத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத் தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருடகால யுத்தத்தை வென்று நாட்டை காப்பாற்றிய ஜெனரல் சரத் பொன்சேகா என்ற வீரனை சிறையில் அடைத்து வெள்ளை காற்சட்டை அணிவித்து நாட்டின் ஆட்சியாளர்கள் கௌரவப்படுத்தினர். பொன்சேகாவின் மன தைரியத்தை அழிக்கவே ஆட்சியாளர்கள் அவரை இப்படி சிறையில் அடைத்து வதைத்தனர்.

சிறையில் இருந்து கொண்டு அதிகளவில் மக்களுடன் பேசிய தலைவர் என்ற வகையில் சரத் பொன்சேகா வரலாற்றில் இடம்பெறுவார். நாட்டிலுள்ள மோசடியான ஆட்சியை மாற்றியமைப்பதற்காகவே சரத் பொன்சேகா அரசியலுக்கு வந்தார். நாட்டை காப்பாற்றும் முதல் நடவடிக்கையில் வெற்றியும் பெற்றுள்ளார்.

இராணுவத்தினருக்கு செய்யும் மாபெரும் அவமதிப்பை இந்த அரசாங்கம் தற்போது செய்து வருகிறது.

நாட்டை அழித்த பயங்கரவாத தலைவர்கள் நாடாளுமன்றத்தில் பதவிகளை வகித்து வருகின்றனர். நாட்டை காப்பாற்றிய இராணுவத்தினர் நாடாளுமன்ற வீதியில் வடிகால்களை வெட்டிக்கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் தலைவர் வெளிநாடுகளுக்கு சென்று கடனை பெற்று வரும் போது விமான நிலையத்திற்கு சென்று மலர் மாலை அணிவித்து வரவேற்கும் நிலைமைக்கு நாடு சென்றுள்ளது என்றார். (அ-2)

# கிளைமோர் குண்டை வைத்திருந்த நபருக்கு பத்து ஆண்டுகள் சிறை

(கொழும்பு)

மஹரகம பகுதியில் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டொன்றை வைத்திருந்தார் என்ற குற்றத்தை ஒப்புக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவருக்கு 10 வருடகால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் இம்ரான் பாண்டியன் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பத்மன் சூரசேன கடூழிய சிறைத் தண்டனையை நேற்று முன்தினம் விதித்துள்ளார்.

சிறைத்தண்ட னைக்கு மேலதிக மாக 10 ஆயிரம் ரூபா தண்டமும் அவ ருக்கு விதிக்கப் பட்டு ள்ளது.

குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பா ண த்தைச் சேர்ந்த நபருக்கே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப் பகுதியில் மஹரகம பகுதியில் சுமார் ஒன் றரை கிலோகிராம் நிறை கொண்ட கிளை மோர் மற்றும் தூர இருந்து இயக்கும் கருவிகள் இரண்டை தம்வ சம் வைத்திருந்தார் என சந்தேக நபர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப் பட்டிருந் தது.

புலிகள் அமைப்பில் இம்ரான் பாண் டியன்குழுவில்இணைந்து கொண்ட அவர் கொழு ம்பு துறைமுகம் தொடர்பிலான தகவல்களை திரட்டுவதற்காகவே கொழு ம்புக்கு வருகை தந்துள்ளார்என்று பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக இரண்டு குற்றச் சாட்டுக் கள் சுமத் தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

அவ்விரண்டு குற்றச்சாட்டுக்களை யும் அவர் ஏற்றுக் கொண்டதையடுத்து நீதிபதி ஒரு குற்றச்சாட்டுக்கு தலா 5 வருடங்கள் என்ற அடிப்படையில் 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையை விதித்து தீர்ப்பளித்தார். (அ-2)


















# இன்று ஒரு தகவல்

## மனிதனும் மிருகமும்

ஒரு பெரிய காடு.

அங்கே ஒரு சிங்கம் இருந்தது.

ஒரு நாள் காலை நேரம் அதற்கு பசியெடுக்க ஆரம்பித்தது. உடனே குகையை விட்டு வெளியே வந்தது. ஏதாவது இரை கிடைக்குமா என்று அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே வந்தது.

அங்கே ஓர் அழகான மான். அப்பொழுதுதான் ஆற்றில் குளிர்த்து விட்டு வந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு நல்ல கொழுகொழுவென்று இருந்தது.

"ஆகா... அருமையான சந்தர்ப்பம். அதை அடித்து சாப்பிட்டு விடலாம் என்று நினைத்து சிங்கம் மெதுவாக அந்த பக்கமாகச் சென்றது. அந்தச் சமயம் பார்த்து நரியொன்று அந்த பக்கமாக வந்தது. அதற்கும் அந்த மானை சாப்பிட வேண்டும்" என்று ஆசை.

ஆனால், சிங்கம் அதைச் சாப்பிட்டுவிட்டால் அதற்கு எங்கே கிடைக்கப்போகிறது.

நரி தந்திரமாக யோசித்தது.

மெதுவாக அந்தச் சிங்கத்திடம் போய்

"சிங்கராஜா! ஒரு விடயம்! சொன்னா நீங்க தப்பா நினைக்ககூடாது" என்றது.

"என்ன சொல்கிறாய்?"

"அதுவந்து... ஒன்றுமில்லை... குளித்துவிட்டுவரும்மானை அடித்துச் சாப்பிட்டால் பதவிக்கு ஆபத்து என்று சாஸ்திரம் சொல்கிறது" என்றது.

"அப்படியா?"

சிங்கம் பயப்பட ஆரம்பித்தது.

"நல்லவேளை! சரியான நேரத்தில் வந்து என்னிடம் சொன்னாய்! வா என்னுடன்... இரண்டு பேரும் பேசிக்கொண்டே போகலாம்" என்றது.

நரிக்கு மறுபடியும் சிக்கல்.

மெதுவாக இந்த சிங்கம் வேறு இரை தேடிப் போய் விடும். நாம் இந்த மானைப் பிடித்துக் கொள்ளலாம் என்பது நரியின் திட்டம்.

இதற்கிடையில் மானும் தப்பித்துப் போய்விட்டது.

இரண்டு பேரும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். நரிக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.

உடனடியாக எதையாவது சாப்பிட்டாக வேண்டும்.

என்ன செய்வது?

மறுபடியும் ஒரு யோசனை கூறியது.

சிங்கராஜா! குளித்துவிட்டு வரும் மானை கொன்றால் பதவிக்கு ஆபதென்பது உண்மைதான். ஆனால், அதற்கும் ஒரு பரிகாரம் உண்டு. அதுவும் சாஸ்திரத்தில் இருக்கிறது என்றது.

என்ன பரிகாரம்?

நீங்கள் நடந்து போகும் எதிரில் வரும் முதல் ஐந்து மிருகங்களை கொன்றுவிட வேண்டும்.

ஆனால், சாப்பிடக்கூடாது. நாள் முழுக்க விரதமிருக்க வேண்டும்.

இவையிரண்டும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது, பக்கத்தில் புதரில் மறைந்திருந்த ஒரு முயலின் காதில் விழுந்தது.

ஆபத்து என்று உணர்ந்த முயல் உடனே ஓடிப்போய் எல்லா மிருகங்களிடமும் இந்தத் தகவலைக் கூறியது.

எல்லா மிருகங்களும் முன்னெச்சரிக்கையுடன் அவை இருக்கும் இடத்தைவிட்டு வெளியே வரவேயில்லை. சிங்கமும் நரியும் அலைந்து திரிந்தன. சாப்பிடுவதற்கு ஒரு மிருகம் கூட கிடைக்கவில்லை. அந்தக் காட்டில் ஒரு பெரிய யானை இருந்தது. அதனிடம் ஓடிப்போய் முயல் நிலைமையைச் சொல்லியது.

எல்லாம் இந்த நரி பண்ணும் வேலைதான் என்பதைப் புரிந்து கொண்டது.

இரு... இரு உனக்கு ஒரு வழி பண்ணுறேன் என்று மனதுக்குள் கறுவிக் கொண்டே அந்தச் சிங்கத்திடம் சென்றது.

சிங்கத்தை தனியாக அழைத்தது.

ஒரு நரியைக் கொன்றால் ஐந்து மிருகங்களைக் கொல்வதற்குச் சமம் என்றது.

நல்ல நேரத்தில் நல்ல யோசனை சொன்னீர்கள் என்று கூறிய சிங்கம் நரியின் பக்கம் திரும்ப ஆரம்பித்ததாம்.

அதன் பின் அங்கு என்ன நடந்திருக்கும் என்றுசொல்ல வேண்டியதில்லை.

இது குழந்தைகளுக்காகச் சொல்லப்படும் கதை.

**கெடுவான் கேடு நினைப்பான்** என்று நீதி விளக்கமும் கொடுப்பார்கள்.

இன்றைக்கு மனிதர்களிலும் இது போல் சிங்கம், நரி, யானை, முயல் எல்லோரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

காட்டில் ஒரு புலி வந்தால் இது புலி என்று தெரியும்.

ஒரு நரி வந்தால் பார்த்தவுடனே இது நரி என்று தெரியும். ஒரு கரடி வந்தால் அதன் தோற்றத்தைப் பார்த்தே வருவது கரடி என்று நாம் தெரிந்து கொள்ளலாம். உடனே நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

ஆனால், நாட்டுக்குள் வந்துவிட்டால் எதிரே வருவதில் எது புலி, எது நரி, எது கரடி என்று புரிந்து கொள்ள முடியாது.

ஒரு வீட்டில் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொள்வதை பிள்ளை கவனித்துக்கொண்டிருந்தான்.

அப்பா சத்தம் போடுகிறார்.

எவ்வளவு நேரமாக இங்கே உட்கார்ந்து கொண்டு கரடி போல் கத்திக் கொண்டிருக்கிறேன். உனக்கு கொஞ்சமாவது புரிகிறதா?

உள்ளேயிருந்து அம்மா:

எனக்கு கரடியின் பாஷையெல்லாம் புரியாதுங்க!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பகுதிச்சேத வீடுகளை புனரமைக்க விரைவில் நடவடிக்கை எடுங்கள்

## மருதங்கேணி கிராம அபி.சங்கம் கடிதம்

கடந்த 2010 ஆம் ஆண்டு புரட்டாதி மாதமளவில் மீள்குடியேறப்பட்ட மக்கள், தமது வீடுகள் புனரமைக்கப்படாமையினால் அடிப்படை வசதிகளற்ற நிலையில் பல இன்னல்களுடன் வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர். மேலும் மீள் குடியேற்றம் இடம்பெற்று 4 வருடங்கள் பூர்த்தியாகின்ற போதிலும் இவர்களின் வீடுகள் கூரைகளற்ற நிலையில் தொடர்ந்தும் சேதமடைந்து வருவதாகவும் குறிப்பிட்டு மருதங்கேணி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களின் வீடுகள் 3 வருட காலமாக மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் தொடர்ந்து சேதமடைந்து வருகின்றன.

மாரி மழை ஆரம்பிக்கவுள்ள நிலையில் இவ் வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் மூலம் எவ்வித உதவிகளும் இதுவரையில் வழங்கப்படவில்லை.

இவ்வாறானநிலை தொடருமாயின் இவ்வருட மழைக்கு இவ்வீடுகள் தாக்குப்பிடிக்க முடியாது முற்றாக இடிந்து விழும் நிலையே ஏற்படும்.

இதுதொடர்பாக மருதங்கேணி பிரதேச செயலாளரிடம் வினவிய போது ஜே/428 மருதங்கேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ள 43 பயனாளிகளின் முன்னுரிமை பட்டியல் தயார் செய்யப்பட்டு அவை ஜனாதிபதி செயலணிக் குழுவின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி பெறப்பட்டவுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் பயனாளிகள் பட்டியல் அனுப்பப்பட்டு ஒரு வருட காலமாகியும் இது வரை அனுமதி கிடைக்கப் பெறவில்லை என அறிகின்றோம்.

எனவே இவ் வருட பருவ மழைக்கு முன்னராவது இவ்வீடுகளை புனரமைப்பு செய்து மருதங்கேணி கிராம மக்களின் இன்னல் போக்கி உதவிமாறு மிகவும் பணிவாக கேட்டுக் கொள்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக் கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், இந்திய துணைத்தூதுவர், மருதங்கேணி பிரதேச செயலர், மருதங்கேணி கிராம அலுவலர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# முதலீடு செய்ய வாருங்கள்; துருக்கியை அழைக்கிறது இலங்கை

வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் இங்கு நம்பிக்கையுடன் முதலீடு செய்ய வருமாறு முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா துருக்கி வர்த்தகர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

துருக்கியில் இடம்பெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் வைத்தே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

நாம் தற்போது துருக்கி இராச்சியத்துக்கு விஜயம் மேற்கொண்டிருப்பதும் இதற்காகவே இலங்கை இன்று அபிவிருத்தி இலக்கை நோக்கி அதிவேகமாகப் பயணிக்கிறது. இது எமக்கும் நமது நண்பர்களான நீங்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது. எமக்கும் உங்களுடைய நாடுகளுக்குமிடையில் பொருளாதார வர்த்தகத்துறையை எதிர்காலத்தில் உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் உங்களுக்கும் எனக்கும் கிடைத்துள்ளது.

உள்நாட்டு முதலீடு மிகவும் சிறந்தது. எனினும் வெளி நாட்டு முதலீடுகளும் எமக்குக் கிடைக்குமானால் இது அதை விடவும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமையும். வெளிநாடுகளுடன் ஒன்றிணைந்த முதலீடுகள் தொடர்பாக இலங்கை நாட்டின் கதவுகள் என்றும் திறந்தேயுள்ளன. முதலீடுகளை விஸ்தரிக்கும் நோக்கில் ஆரம்பம் முதல் இறுதி வரைக்கும் என்றும் உங்களுடன் உங்கள் நாடுகளுடன் நம்பிக் கையாகவும் நாணயமாகவும் கைகோர்த்து நிற்போம் என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என்று கூறினார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 60 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 100 | 120 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 170 | 140 - 160 | 160 - 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 60 | 60 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 |
| பீற்றூட் | 15 | 40 | 40 |
| கறிமிளகாய் | 50 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 160 | 100 |
| போஞ்சி | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 - 45 |
| இராசவள்ளி | 80 | 120 | —— |

# இராசி பலன்

06.09.2013

(ஆவணி 21, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 06.03 மணிக்கு

பிரதமை மாலை 06.08 மணிவரை

பூரம் முற்பகல் 9.01 மணிவரை

இராகுகாலம் 10.34 - 12.04 மணிவரை

சுபநேரம் 06.04 - 07.34 மணிவரை

நல்லைக்கந்தன் பூங்காவனம்

**மேடம்** பிறருக்கு உதவி செய்வதில் பிரியப்படுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**இடபம்** தொலைபேசி மூலம் சுப தவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பயந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த பிணக்குகளில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், அந்நியர் சந்திப்புண்டு, கூட்டு முயற்சியில் முன்னேற்றமுண்டு.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், செய்தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்** கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெரியோர் சந்திப்புண்டு, சயன சுகமுண்டு, அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களைப் பெறுவீர்கள்.

**கன்னி** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொழிலில் பணியாளர்களை மாற்றும் எண்ணம் உருவாகும், சுப விரயங்கள் அதிகரிக்கும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**துலாம்** எதிர்கால முன்னேற்றத்திற்கு திருப்புமுனையான நாள், இறை நம்பிக்கை அதிகரிக்கும், அந்நியர் உதவியுண்டு, பெருமையும் புகழும் கூடும், வருமானம் திருப்திதரும்.

**விருச்சிகம்** பிறர் உதவியுண்டு, சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு கிடைக்கும், சிலரது கட்டளைக்கு கட்டுப்பட நேரிடலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் தித்திக்க வைக்கும், உடல்நலனில் கவனம் தேவை.

**மகரம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சிலர் காரணமில்லாமல் உங்கள் மீது வெறுப்பைக் காட்டலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன நன்மையுண்டு.

**கும்பம்** திடீர் பயணங்களால் பலனுண்டு, காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், பொறுமையாகச் செயற்பட்டு அமைதிகாண வேண்டிய நாள், பிறர் உதவியுண்டு.

**மீனம்** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தொழில் விருத்திக்கு அதிகம் பாடுபடுவீர்கள், தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், நண்பர்கள் உதவி செய்ய முன்வரலாம்.

வளவன்

## நல்லூர் ஆலய சூழலில் தேர்தல் பிரசாரம்

### ஐ.ம.சு.முதன்மை வேட்பாளர் ஆ.சி.தவராசா குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழாவை தேர்தல் பிரசாரத்திற்காக கூட்டணியினர் பாவித்த செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதும் கவலைக்குரிய விடயமுமாகும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளர் தவராசா ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நல்லூர் தேர்த்திருவிழாவிற்கு விஜயம் செய்திருந்த இரா.சம்பந்தன், விக்னேஸ்வரன் மற்றும் ஏனைய கூட்டணி முக்கியஸ்தர்கள் தேர்த்திருவிழா நிகழ்வினை நேரடி ஒளிபரப்பு செய்து கொண்டிருந்த டான் ரீவியின் தற்காலிக ஒளிபரப்பு நிலையத்திற்குள் அழையா விருந்தினர்களாக நுழைந்து நல்லூர் கந்தனின் உற்வசத்திற்கு ஆசிச் செய்தியை நேரடி ஒளிபரப்பு செய்வதற்குரிய சந்தர்ப்பத்தை தமக்கு வழங்கும்படி கோரியபோது டான் ரீவியினர் அனுமதி வழங்கியுள்ளனர்.



அச்சந்தர்ப்பத்தை துஷ்பிரயோகம் செய்த சம்பந்தன் ஐயா, விக்னேஸ்வரனுக்கு வாக்களியுங்கள் என்று தேர்தல் பிர சாரம் செய்தமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கதும் கவலைக்குரியதுமாகும்.

அத்துடன் கோவிலுக்கு வந்த பக்தர்களுக்கு கூட்டணி வேட்பாளர் சிவாஜிலிங்கம் தனது தேர்தல் பிரசுரங்களை விநியோகித்ததாகவும் பக்தர்கள் கவலையுடன் முறையிட்டுள்ளனர் என்றும் தவராசா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)




# மாகாண சபைத் தேர்தல் அபிவிருத்திக்கானதே

## ஐ.ம.சு. வேட்பாளர் அங்கஜன்


விவசாயம், மீன்பிடி, கல்வி, இளைஞர்கள்என்கின்றநான்கு விடயங்களும் யாழ்ப்பாணத்தின்முதுகெலும்புகள். மீண்டும் யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்புவதற்கு இந்த நான்கு விடயங்களிலும் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும். இது உரிமைக்கான களம் அல்ல. அபிவிருத்திக்கான களம். நாம் இந்த முறை சிந்தித்து செயற்பட வேண்டிய தேவை இருக்கின்றது என ஐ.ம.சு.வேட்பாளர் அங்கஜன் தெரிவித்துள்ளார்.

கெருடாவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ,

மாகாண சபைத் தேர்தல் களத்தில் நிற்கும் சிலர் உரிமைகள் , சுயநிர்ணயம் என பலவற்றை பேசுகின்றனர். உண்மையில் இது அபிவிருத்திகளை மட்டுமே செய்யக் கூடிய மாகாண சபைக் கட்டமைப்புக்கானதேர்தலே. எனவே எமது பிரதேச அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சரியானவேட்பாளர்களைத்தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு உங்கள் எல்லோரிடமும் உள்ளது.

ஏனையமாகாணங்களைப் போல் நாமும் எமது மக்களின் நலன்களுக்காக சிந்தித்து எமது யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி, இந்த பிரதேசத்தின் அபிவிருத்திகள், வாழ்வாதார முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு எமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

நாமும் ஏனைய மக்கள் பெறும் அனைத்து அபிவிருத்திகளையும் பெற்று வாழ்க்கை தரத்தில் உயர்ந்த நிலைக்கு வந்த பின்னர் எமக்கான உரிமைகளைக் கோரும்போது அவை நிச்சயம் கிடைக்கும். அத்தோடு அபிவிருத்தியும் ஒரு உரிமைதான் என்பதை யாரும் மறக்கக்கூடாது. எனவேஏனைய உரிமைகளை மட்டுமே கேட்டுக் கொண்டு இந்த அபிவிருத்தி உரிமையை நாம் விட்டு விட்டோம் என்றால் இன்னுமொரு 30 வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் இதே கஷ்டங்களைத்தான் அனுபவிக்க நேரிடும் என்றார். (அ)








## சுவிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 20 பாடசாலைகள் புனரமைப்பு

### இரு பாடசாலைகள் இன்று திறப்பு

இலங்கையின் வடக்கில் இடம்பெறும் சுவிட் சர்லாந்து மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முழுமையாக புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இரு பாடசாலைகள் இன்று திறந்து வைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இதன்படி கிளி/தட்டுவன்கொட்டி கண்ணகி அம்மன் வித்தியாலயம் மற்றும் யா/உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு கையளிக்கப்படவுள்ளன.

இத் திறப்பு விழா நிகழ்வுகள் கிளி/தட்டுவன் கொட்டி கண்ணகி அம்மன் வித்தியாலயத்தில் முற்பகல் 10 .30 மணிக்கும் யாழ்/உடுத்துறை மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கும் நடைபெறவுள்ளதுடன் இந் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி கலந்து கொள்ளவுமுள்ளார்.

இதேவேளை, இவ்வாறு மேற்படி நிறுவனத்தினால் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் வட மாகாணத்தின் 20 பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்பட்டு கையளித்துள்ளதுடன் இவற்றின் மூலம் 11 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயன் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)




# கூட்டமைப்பின் வெற்றியை அதிகரிக்கும் நோக்கில் ஜ.மக்கள் முன்னணி ஆதரவு

## அதன் தலைவர் மனோ தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் ஜனநாயக வழிப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது என்பதை வடக்கு மாகாணசபைத் தேர்தல் ஊடாக நிரூபிக்க வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கின் 5 மாவட்டங்களிலும் பாரிய பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் என்ற அந்தச் செய்தி இப்பொழுது தெட்டத் தெளிவான முடிவாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை மேலும் அதிகரிக்கும் நோக்குடனும் உறுதிப்படுத்தும் நோக்குடனும் ஜனநாயக மக்கள் முன்னணி தார்மீக அரசியல் ஆதரவை தெரிவிப்பதற்காக வந்துள்ளது.

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்கள் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்து உலகத்தின் கவனத்தையும், தென்னிலங்கையின் கவனத்தையும் வடக்கு மாகாணத்தின் பால் திருப்பி, தமிழர் ஒரு தேசிய இனம், தமிழரின் தேசிய உரிமைகளுக்கான போராட்டம் ஜனநாயக வழியில் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது என்பதை நிரூபிக்க வேண்டும்.

தெற்கிலே உரிமைக்கு குரல் கொடுக்கும் அதேவேளை, வடக்கிலும் உறவுக்கு கரம் கொடுக்க வேண்டும் என்ற நிலையிலான தெளிவான கொள்கையின் அடிப்படையில் ஆதரவு வழங்குவதற்கு நாம் இங்கு வந்துள்ளோம்.

மாகாண சபை முறைமையானது தமிழ்த் தேசிய எதிர்பார்ப்புகளுக்கு ஈடுசெய்யக் கூடியதல்ல என்பது ஏற்கனவே முடிந்தமுடிவு.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்திற்கு ஏற்கனவே அறிவித்துள்ளது. அதனை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். இருப்பினும் இந்த மாகாணசபை முறைமையைப் பயன்படுத்தி தமிழரது ஜனநாயக வழிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

இந்த அரசாங்கம் போர்முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல்,உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பனவற்றை நடத்தி முடித்திருக்கின்றது.

ஆயினும் மாகாண சபைத் தேர்தலை வட மாகாணத்தில் நடத்தாது தவிர்த்து வந்தது. இதற்கு காரணம், வடக்கு மாகாண சபை கூட்டமைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்பதாகும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் இங்கு வாழும் மக்களுக்கு மட்டும் முக்கியமான தொன்றல்ல. இலங்கை முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்கும் முக்கியமானதொன்று.

அதுமட்டுமன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றி பாரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான சுரேஸ் பிரேமச்சத்திரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலர் உரையாற்றியிருந்தனர். (அ-6)

## தேசிய அடையாள அட்டை இதுவரை கிடைக்கவில்லை

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்கள் நடமாடும் சேவையில், தேசிய அடையாள அட்டை பெறபதிவு செய்துள்ள நிலையில், தற்போது தற்காலிக அடையாள அட்டைக்கு பதிவு செய்யுமாறு கிராம சேவையாளர்கள் பணிப்புரைவிடுத்துள்ளனர். இதையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


மேற்படி பிரதேசத்தில் ஒரு மாதத்திற்கு முன்னர் நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றது.

இதில் தேசிய அடையாள அட்டை, விவாகப் பதிவு, பிறப்புச் சான்றிதழ் என்பனவற்றை பெற்றுக் கொள்ள மக்கள் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். வடமாகாண சபைத் தேர்தல் நெருங்குவதனால் மக்களுக்கு இத் தேசிய அடையாள அட்டை முக்கியமானதாகும்.

இந்நிலையில் இப்பகுதி மக்களுக்கு இன்னமும் தேசிய அடையாள அட்டை வழங்கப் படவில்லை. அதற்கு மாறாக கிராம சேவையாளர்கள் தமது பிரிவுக்குட்பட்ட மக்களிடம் இரண்டு புகைப்படங்களை எடுத்துவந்து தற்காலிக அடையாள அட்டைகளுக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளனர்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்கள் தம்மால் இப்புகைப்படங்களைப் பெறுவது சிரமமாகவுள்ளதென சுட்டிக்காட்டியுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுத் தர ஆவன செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-17)



வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமான போது...

## கைலாச வாகன வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான கைலாச வாகன வெள்ளோட்ட விழா, எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கான ஆசியுரையை சிவஸ்ரீபா. அகிலேஸ்வரக்குருக்களும் வாழ்த்துரையை தெல்லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனனும் வழங்கவுள்ளனர்.இக் கைலாச வாகனத்தை புத்தூர் காளிகா சிற்பாலய முதல்வர் சிற்பக் கலாவித்தகர் செ.பாலச்சந்திரன் உருவாக்கியுள்ளார். (அ-5)

# போரில் 70,000 மக்கள் கொல்லப்பட்டதை நிராகரிக்கும் இலங்கையில் உச்சி மாநாடா?

## கெலம் மக்ரே கேள்வி

**இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் 70 ஆயிரம் தமிழ் மக்களைக் கொன்று குவித்தமையை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்ற நிலையில், ஏன் பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டுமென கெலம் மக்ரே கேள்வி எழுப்பியுள்ளார்.**

என்னுடைய வாழ்நாளிலே கடந்த 3 ஆண்டுகளில் மிகவும் கொடுமையான புகைப்படங்களை பார்க்க நேர்ந்தது. இப் புகைப்படங்கள் அனைத்தும் இலங்கை இறுதிப் போரின் போது இறுதியான 138 நாட்களுக்குள் எடுக்கப்பட்டவை. இப்போர் நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே நிறைவு பெற்றுவிட்டதாயினும்கூட இப்போரை எனது "நோ பயர் சூன் மற்றும் இலங்கையின் கொலைக்களங்கள்" ஆகிய ஆவணப் படங்களின் பிரதான கருப்பொருளாக இருந்தது.

40 ஆயிரம் மக்களே கொல்லப்பட்டனர் என இலங்கை அரசாங்கம் அறிவித்தது. ஆனால் காடுகள், வயல் வெளிகள் எங்கிலும் மனித சடலங்களே காணப்படுகின்றன. உதாரணமாக குண்டுப் பொழிவின் பின்னர், பங்கருள் ஒளிந்திருந்த இரு பெண் குழந்தைகள் தங்கள் வீட்டினுள் காயமுற்றவர்களுக்கு உதவவேண்டுமென அழுகின்றன. ஆனால் அவர்கள் கரங்களை மற்றுமொரு பெண் மணி பிடித்து இழுக்கிறாள்.

சிறிது நேரத்தில் மீண்டும் குண்டுகள் வீழ்கின்றன. இறுதியில் இக் குழந்தைகளும் வீரிட்டு அம்மா என்று கதறுகின்றனர். ஏனெனில் இக்குண்டுகள் அக் குழந்தைகளின் தாயின் உயிரைப் பறித்து விட்டன.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையும் 70 ஆயிரம் தமிழ் மக்கள் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் பொழுது கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கிறது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களுள் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர்.

தங்கள் பிரச்சினை தொடர்பில் சர்வதேசம் தலையிட வேண்டும் என்றும் தங்களை விட்டு விட்டு செல்ல வேண்டாம் எனவும் மக்கள் கெஞ்சியதை விடுதலைப் புலிகள் கண்ணுற்றனராயினும் அதற்குரிய நடவடிக்கை எடுக்க தவறிவிட்டனர்.

சர்வதேசம் தலையிட்டமை பாரியதோர் போர்க்குற்றமாகவே கருதப்படுகின்றது. மேலும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் பின்னிக்கிறது.

இவை புலிகளாலும் சர்வதேச சமூகத்தாலும் இழைக்கப்பட்ட தவறுகள் என்பதை எம்மால் மறுக்க மற்றும் மறக்க இயலாது. பெரும்பான்மையான மக்கள் இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களினாலேயே கொல்லப்பட்டனர்.

இவ்வாறு பல படுகொலைகளை நோ பயர் சோன் ஆவணப்படம் சித்தரிக்கிறது. இக்காணொளியிலுள்ள இரு காட்சிகள் என்னை கண் கலங்க வைத்து விட்டன. ஆகையால் தான் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இவ்வனைத்து போர்க்குற்றங்களுக்கும் பொறுப்பானவரோடு பொதுநல மாநாட்டின் பொழுது கை குலுக்குவதை விரும்பவில்லை.

பொதுநலவாய மாநாட்டை நடத்துவதன் மூலமாக தங்கள் குற்றச்செயல்கள் மறைக்கப்பட்டு விடுமென இத் தலைவர்கள் கருதுகின்றனர். இத்தருணத்தில் கமரூன் அவதானமாக செயற்பட வேண்டும். ஏனெனில் அவருடைய செயற்பாடுகள் போர் குற்றவாளிகளின் நோக்கை ஆதரிப்பதாக அமைந்து விடுவதற்கு வாய்ப்புள்ளது.

வடகிழக்கு பகுதிகளில் தனி இராஜ்யத்தை உருவாக்குவதற்காக விடுதலைப் புலிகள் 26 வருடங்கள் போராடினார்கள். இரும்பு வேலிகளால் அடைக்கப்பட்ட ஓர் இராஜ்யத்தை புலிகள் தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பினார்கள். இவர்கள் சிறுவர்களைப் போராளிகளாக இணைத்து அவர்களை இலங்கை இராணுவ காவலரண்கள் மீது மற்றும் பொதுமக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்துவதற்காக தற்கொலை குண்டுதாரிகளாக மாற்றினார்கள்.

2009 ஆம் ஆண்டு புதிய ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக தோற்கடித்தார். இவர் புலிகள் மீது மாத்திரமன்றி தமிழ் மக்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டார்.

இவ்வாறு பல படுகொலைகளை நோ பயர் சூன் சித்திரிக்கின்றது. பங்குனி மாத மனித உரிமைகள் குழுவில் அமர்வுகளில் இக்காணொளி திரையிடப்பட்டமையினால் வாக்களிப்பிலும் பாரிய மாற்றம் நிகழ்ந்தன.



2009 ஆம் ஆண்டு போர் குற்றச் செயல் தொகுப்புக்கள், பெண் போராளிகளுக்கெதிரான பாலியல் வன்புணர்வுகள், சிரத்தில் சுடுதல் , விடுதலைப் புலிகள் தலைவரின் 12 வயது மகன் சிற்றுண்டி உண்ணும் வேளையில் அவன் மீது மேற்கொள்ளப்படும் துப்பாக்கி பிரயோகம் ஆகிய காட்சிகளை காண்பிக்கின்றன. இவ்வனைத்தும் கையடக்கத் தொலைபேசிகளில் பதிவு செய்யப்பட்டவையாகும்.

இன்றும் இந்நிலையே வட கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு தொடர்கின்றது. அவர்களுக்கு அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. தங்கள் சமயத்தைப் பின்பற்ற வழிபாடுகளில் ஈடுபட முடியாமை, சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பால் தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய முடியாமை என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

நீதித்துறை அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளது. குடிநீருக்காக போராடிய மக்கள் மீது கடந்த மாதம் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையில் சிவிலியன்கள் மீது மனித உரிமை மீறல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. அரசுக்கு எதிராக குரல் கொடுப்போர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இல்லையேல் அவர்கள் முற்றாக மௌனிக்கச் செய்யப்படுகின்றனர் என கூறியுள்ளார் என்றார். (அ-2)

## நவநீதம்பிள்ளை தெரிவித்த ஆறு விடயங்களுக்கு பாராட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்த 6 விடயங்கள் தொடர்பில் அவருக்கு பாராட்டு கூறுவதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் உபசரிப்பு, விடுதலைப் புலிகள் மிலேச்சத்தனமான கொலைகார அமைப்பு, வடக்கின் மீள் கட்டமைப்பு பணி கள், வடக்கு தேர்தல் நடத்தப்படுவது ஆகிய விடயங்கள் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துக்களுக்கு பாராட்டு தெரிவிக்கின்றோம்.

நவநீதம்பிள்ளை இலங்கை வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை மூலம் நாட்டில் ஜனநாயகம் பற்றிய செய்தி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை அமைச்சர் மேர்வின் சில்வா, நவநீதம்பிள்ளையை திருமணம் செய்துகொள்ள விரும்புவதாக தெரிவித்திருந்தமை பற்றி ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அழகப்பெரும, அமைச்சரின் அந்தப் பேச்சு தொடர்பில் தான் கவலையடைவதாக கூறினார்.

நவநீதம்பிள்ளை எனது தாயின் வயதை விட இரண்டு வயது சிறியவர். அப்படியான ஒருவருக்கு திருமண யோசனையை முன் வைப்பது பெரும் தவறு எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனிடையே 1987 ஆம் ஆண்டுக்கு பின்னர் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் யாழ்தேவி புகையிரதம் கிளிநொச்சி வரை தனது சேவையை நடத்தவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)


வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

குமாரு சர்வானந்தன் (சர்வா)
ஆயுத கலாசார அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய அரசியல் கலாசாரத்துடன் புறப்பட்டுள்ள துணிவு, நேர்மை, செயல்திறன் மிக்க இளம் வேட்பாளர்
குமாரு சர்வானந்தனை (சர்வா)
அமோக விருப்பு வாக்குகளால் வெற்றியடையச் செய்வோம்
வலிகாமம் வாழ் நண்பர்கள்
X 11
(E-026)


மாகாணசபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்

தடைகளைத் தாண்டி
உரிமைகளை வென்றிட
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
சுரேஷ் பிரேமச்சந்திரனின் தெரிவு
அரசியல் விஞ்ஞான கலாநிதி
க.சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
எமது உயிரை உடமைகளை உரிமைகளை நாமே பாதுகாத்திட
இலங்கைத் தமிழரசுக்கட்சி
4
(EC/4967)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



# சிறுவர் அரங்கம்

568

## அரசர் குதிரை



ஆதனார் என்ற அரசர் தென்றல் நாட்டை நல்லாட்சி செய்து வந்தார். மக்களுக்கு ஏதேனும் குறை உள்ளதா என்பதை அறியவிரும்பினார். வணிகனைப் போல மாறு வேடம் போட்டுக் கொண்டு குதிரையில் அமர்ந்தார். ஒவ்வொரு இடமாகப் பார்த்துக்கொண்டு வந்தார். வழியில் வழிப்போக்கன் ஒருவன் நின்றிருந்தான். குதிரையில் அவர் வருவதைப் பார்த்த அவன் கைகாட்டினான். அவரும் குதிரையை நிறுத்தினார். "ஐயா! நீண்ட தொலைவு நடந்துவந்ததால் களைப்பு அடைந்து உள்ளேன். பக்கத்து ஊர்ச்செல்ல வேண்டும். உங்கள் குதிரையில் என்னையும் ஏற்றிச் செல்லுங்கள். இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்" என்று வேண்டினான்.

இரக்கப்பட்ட அவர், குதிரையில் ஏறிக் கொள் என்றார். அவனும் குதிரையில் ஏறி அமர்ந்தான். இருவரையும் சுமந்து கொண்டு குதிரை பக்கத்து ஊரை அடைந்தது.

"உன் ஊர் வந்துவிட்டது இறங்கிக் கொள்" என்றார் அரசர். "இது என் குதிரை... நான் ஏன் இறங்கவேண்டும். இரக்கப்பட்டு உன்னை குதிரையில் ஏற்றி வந்தேன். பெரிய ஏமாற்றுக்காரனாக இருப்பாய்போல இருக்கிறதே. நீ கீழே இறங்கு" என்று அதட்டினான் வழிப்போக்கன். "இது என் குதிரை. நீ கீழே இறங்கு" என்றார் அரசர். அங்கே கூட்டம் கூடிவிட்டது. "தான் யார் என்ற உண்மையைச் சொல்ல வேண்டாம். என்னதான் நடக்கிறது பார்ப்போம்" என்று நினைத்தார் அரசர். கூட்டத்தினரைப் பார்த்து, "ஐயா! இது என் குதிரை... வழியில் இவன் குதிரையில் தன்னை ஏற்றிச் செல்லுமாறு கெஞ்சினான். நானும் குதிரையில் ஏற்றி வந்தேன். இங்கே வந்ததும் இதைத்தன் குதிரை என்று அடாவடியாகப் பேசுகிறான்" என்றார். அவனோ, இது என் குதிரை. இவனை நான் ஏற்றி வந்தேன். உங்கள் எல்லோரையும் இவன் ஏமாற்றப்பார்க்கிறான்" என்றான்.

அங்கே இருந்தவர்களால் குதிரைக்குச் சொந்தக்காரர் யார் என்பதைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. இருவரையும் பார்த்து, "இந்த ஊர் நீதிபதியிடம் செல்லுங்கள். அவர் உங்கள் வழக்கைத் தீர்த்து வைப்பார்" என்றனர். அவர்கள் இருவரும் குதிரையுடன் நீதிபதியிடம் வந்தனர். தான் அரசன் என்ற உண்மையை அவர்வெளிப்படுத்தவில்லை. "நீதிபதி எப்படித் தீர்ப்பு வழங்குகிறார்? பார்ப்போம்" என்று நினைத்தார். இருவரையும் பார்த்து நீதிபதி, "உங்களுக்குள் என்ன வழக்கு?" என்று கேட்டார். "நீதிபதி அவர்களே! நான் குதிரையில் வந்து கொண்டிருந்தேன். வழியில் இவர் குதிரையில் என்னை ஏற்றி வரும்படி வேண்டினார். நான் இவரை ஏற்றி வந்தேன். இந்த ஊர் வந்ததும் இவர், இது தன் குதிரை என்கிறார். என்னை ஏற்றி வந்ததாகச் சொல்கிறார். என் குதிரைக்கு உரிமை கொண்டாடுகிறார். நீங்கள் தான் நல்ல தீர்ப்பு வழங்கவேண்டும்" என்றான் வழிப்போக்கன்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று அரசைப்பார்த்துக் கேட்டார் நீதிபதி. "நீதிபதி அவர்களே! இது என் குதிரை. இரக்கப்பட்டு இவனை ஏற்றி வந்தேன். இப்போது இந்தக் குதிரையே இவனுடையது என்கிறார். இப்படி ஒரு ஏமாற்றுக்காரனை நான் பார்த்தில்லை. நீங்கள் தான் என் குதிரையை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றார் அரசர். அங்கிருந்த வீரர்களை அழைத்தார் நீதிபதி "இந்தக்குதிரையை கொட்டடியில் அடையுங்கள். மற்றக் குதிரைகளுடன் இது இருக்கட்டும்" என்றார்.

அவர்களும் அந்தக் குதிரையை மற்ற குதிரைகளுடன் சேர்த்துக்கட்டினர். சிறிது நேரம் சென்றது. குதிரைகள் கட்டப்பட்டு இருந்தஇடத்திற்கு நீதிபதி வந்தார். அவர்கள் இருவரையும் ஒவ்வொருவராக அழைத்தார்.

"உங்கள் குதிரையை அடையாளம் காட்டுங்கள்" என்றார். இருவருமே, அந்தக் குதிரையை சரியாக அடையாளம் காட்டினர். மாறுவேடத்தில் இருந்த அரசரைப் பார்த்த நீதிபதி, "இது உங்கள் குதிரை, இவன் ஏமாற்ற முயன்று இருக்கிறான்" என்றார். இதைக்கேட்ட அரசர் வியப்பு அடைந்தார். தான் மாறுவேடத்தை நீக்கினார். அரசரைப்பார்த்த நீதிபதி அவரை வணங்கினார். "நீதிபதி அவர்களே! நாங்கள் இருவருமே குதிரையைச் சரியாக அடையாளம் காட்டினோம். நான் தான் கு திரையின் சொந்தக்காரன் என்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டார். "அரசர் பெருமானே! நீங்கள் குதிரையின் அருகே சென்றதும், அது மகிழ்ச்சியாகக் கனைத்தது. உங்களை உரசிக்கொண்டு நின்றது. ஆனால், அவன் அருகில் சென்றதும் அந்தக் குதிரை அவனை உதைத்தது. இதைப் பார்த்த நான், நீங்கள் தான் குதிரையின் சொந்தக்காரன் என்பதை அறிந்துகொண்டேன்" என்றும் விளக்கம் தந்தார் நீதிபதி.

"உங்கள் அறிவுக்கூர்மையைப் பாராட்டுகிறேன் என்ற அரசன் அவர்களுக்கு பரிசுகளைக் கொடுத்தார். ஏமாற்ற முயன்ற வழிப்போக்கனுக்கு, தக்க தண்டனை கொடுத்தார் அரசர்.

## பஞ்சதந்திரக் கதைகள்

## கெட்டிக்கார சேவல்



ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலைநேரம் ரம்மியமாக இருந்த படியால் உற்சாகமாய் சேவல் கூவியது. பல தடவை கூவியது. இதைக் கேட்ட நரி அங்கு வந்தது.நரிக்கு சரியான பசி இருந்தது. அந்த சேவலை பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது, ஆனால், சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடிய வில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினத்தது. உடனே, சேவலை பார்த்து, "சகோதரனே!.வணக்கம். ஒரு நல்லசெய்தியை நீ கேள்விப்பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக் கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளக்கூடாது. அன்பாய் நடந்துகொள்ள வேண்டும். சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றிப் பேசுவோம்" என்றது.

நரியின் தந்திரப்பேச்சை சேவல் புரிந்துகொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப்போல் எதையோ தூக்கிப் பார்த்தது. இதைக் கண்ட நரி, "என்ன சகோதரா!.ரொம்ப அக்கறையா எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது?" என்று கேட்டது. அதற்கு சேவல், அங்கே சிலவேட்டை நாய்கள்வருவது மாதிரி தெரிகிறது.வேட்டைநாய்கள் தானா? என்பதைக்கவனிக்கிறேன்" என்றது. அவ்வளவுதான் நரிக்கு உடல் நடுங்கிவிட்டது, வேகவேகமாக "சரி, சரி நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன் என்று கூறி கிளம்பியது. சேவல், "அருமைச் சகோதரா, போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்?

இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது" நரி "அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேக நபர்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள்,அந்த நாய்களுக்கு தெரியாமல் இருந்தால், நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்" என்றது இதை சொல்லிவிட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடிக் காட்டுக்குள் மறைந்தது.

சேவல் "யாரிடம் ஏமாற்றப்பார்க்கிறாய், உன்னுடைய கெட்டிக்கார பொய்கள் என்னிடம்பலிக்காது" என்று கூறி சிரித்தது.

*கெட்டிக்காரன் புளுகினாலும் அது புத்திசாலியிடம் வெளிப் பட்டுவிடும்.*

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்துடன் நாட்டார் வழக்கியற் கழகமும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து வழங்கும் வள்ளி திருமணம் இசை நாடகம் இன்று மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று விரிவுரையாளர் ச.லலீசன் வழங்கும் **வீடும் வேண்டா விறல்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவும் காரைநகர் கிழவன் காடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து விசேட நிகழ்வாக சிறுப்பிட்டி வில்லிசைக் கலைமாமணி சத்தியதாஸ் குழுவினர் வழங்கும் பார்வதி திருக்கல்யாணம் வில்லிசை நிகழ்வு இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் நிகழ்வுகளில் இன்று மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் வழங்கும் **திருக்கல்யாணம்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அத்துடன் சொற்பொழிவாளர், கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கம நிகழ்வில் இன்று கோப்பாய் சந்திரசேகரசர்மா மயூரத்வனி, இசைக்கலை முதுமாணி கம்சத்வனி சோமசுந்தரக் குருக்கள் ஆகியோர் வழங்கும் இசைக் கச்சேரி மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். இந்நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை இந்துவாக வாழ்வோம் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தி யானந்தசர்மா வழங்கும் பாரதவம்சம் பற்றிய இசைப் பேருரை இடம்பெற்று வருகின்றது. இந்நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை தர்மர் பட்டாபிஷேகம் என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. (7)

# இரட்டை குடியுரிமையாளர்களை கண்காணிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

வடக்கைச் சேர்ந்த இரட்டைக் குடியுரிமையாளர்களைக் கண்காணிக்குமாறு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கடமை புரியும் புலனாய்வு அலுவலர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினூடாக ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அக்கட்டளையில் இலங்கையின் வடக்கைச் சேர்ந்த இரட்டைக் குடியுரிமையாளர்கள் விமான நிலையத்தில் தரையிறங்கும் போது சுங்க அதிகாரிகளிடம் கையளிக்கும் தங்குமிட முகவரி கொழும்பு முகவரியாக இருக்கின்ற போதும் அவர்கள் வேறு முகவரியில் தங்கியிருப்பதாகவும் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் விமான நிலையத்தில் இரட்டைக் குடியுரிமையாளர்கள் சமர்ப்பிக்கும் விமான நிலைய வருகைக்கான அட்டையில் பதியப்படும் விபரங்கள் சேகரிக்கப்பட்டு புலனாய்வுப் பிரிவின் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் இரட்டைக் குடியுரிமையாளர்கள் விமான நிலையத்தில் அவர்களால் கொடுக்கப்படும் முகவரியில் தங்கியுள்ளனரா? என ஒப்பிட்டு பரிசோதிக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் புலம்பெயர் தமிழர்கள் அதிகளவில் வாக்களிக்கலாம் என அரசாங்கம் எதிர்பார்ப்பதும் இரட்டைக் குடியுரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனரா? என கண்காணிப்பதற்குமே இந்த புதிய நடைமுறை என இணையத்தளங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ-2)

## நீர் விநியோகத்திட்டம் அமைக்கும் பணி சீனாவிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

தோல்வியடைந்த நுரைச்சோலை அனல் மின் திட்டத்தை நிர்மாணித்த சீன நிறுவனத்துக்கு பாரிய நீர் விநியோகத்திட்ட அமைப்பு பணி தற்போது கையளிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கம்பஹாவில் இந்த நீர் விநியோகத்திட்டம் 229 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவிருப்பதாக ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் தேசிய இயந்திரவியல் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனமே இந்த திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது. குறித்த நிறுவனம் அமைத்த நுரைச்சோலை அனல் மின் மையம் இன்னும் முழுமையாக இயங்கவில்லை.

இதன் காரணமாகவே அரசாங்கம் மின்சார கட்டணங்களை அதிகரித்தது என்றும் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த நிறுவனம் உரிய தரங்களில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவில்லை என இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கமும் குற்றம் சுமத்தியுள்ளமையை ரணில் விக்ரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சட்டவிரோத குடியேற்றங்களை தடுக்க 67 மில்.டொலர் ஒதுக்கீடு


இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கு இடையில் இருப்பது அகதிகள் தொடர்பிலான பிரச்சினையல்ல என்று அவுஸ்திரேலியாவின் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அலெக்ஸ்சாண்டர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகதிகள் தொடர்பான பிரச்சினையானது திருட்டுப் பொருள் வியாபாரிகளை போல் செயற்படும் திட்டமிட்ட சிலரால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினை என லிபரல் கட்சி நம்புகிறது.

அடுத்த தேர்தலில் தாம் தெரிவு செய்யப்பட்டால் தமது கூட்டணி திட்டமிட்டுள்ள சட்டத்திற்கு விரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் வருபவர்களைத் தடுப்பதற்கு யோசனைகள் முன்வைக்கப்படும்.

இதனடிப்படையில் அவுஸ்திரேலிய லிபரல் கட்சி இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா நாடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுக்க 67 மில்லியன் டொலர்களைப் பயன்படுத்த எண்ணியுள்ளது என்றார். (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு பூங்காவனத் திருவிழா



## ஞானக் கண் வேண்டும்



நல்லையம்பதி வாழும் நாயகனாம்
நல்லருளைத் தந்திடும் வேலனாம்
வள்ளி தெய்வயானை மணவாளன்
மணமாலை சூட்டிடக் காண
வேண்டுமையா ஞானக் கண்

இ.தனா, ஆனைக்கோட்டை

## வல்லியர் இருவர் மருங்குற மகிழ

நல்ல கரமொன்றில் ஞானவேல் உடையர் மற்றும்
சொல்லுங் கரங்களில் வெல்படைகள் பொலிய
வல்லியர் இருவர் மருங்குற மகிழ வைகுமிடம்
நல்ல நல்ல மாந்தர் நாளும் வணங்கும் திருநல்லூர் தாமே.

சிவ.சண்முகவடிவேல், ஏழாலை.

## பூங்காவனத்திலே திருக்கல்யாணமாம்...

பூங்கா வனத்திலே திருக்கல்யாணம் கந்தனுக்கு
பாங்காகப் பக்கத்திலே வள்ளி தெய்வானை சக்திகளாம்
ஆங்காரச் சூரனை அழித்தருளிய ஆறுமுகனாம்
நாங்காண வீதிவலம் நல்லூரில் அற்புதமாம்!

இராசையா ஸ்ரீதரன், திருநெல்வேலி.

## நல்லூர் பூங்காவனம்



பூங்காவனம் நல்லூர் பூங்காவனம்
பூலோகம் மகிழ்ந்திடும் பூங்காவனம்
அங்கு தினைப்புனக் குறத்தியுடன்
அழகிய வேலவன் மகிழும் மனம்
தெங்கு கமுகொடு மாவிலை தோரணம்
தேன்மழை பொழிந்திடும் பூவின் மணம்
தங்க மணியணி முத்துக் குமரனார்
தாலியை வள்ளிக்கு சூட்டும் மணம்

வேலணையூர் சுகுமார்.

## நல்லூர் கந்தனே நல்லாட்சி புரியுமய்யா

அன்னையிடம் வேல்வாங்கி சூரனின் ஆணவத்தை அழித்து
அன்பினால் வள்ளி தெய்வானையை மணம் முடித்த மருகா!
வேட்டுவ வேடம் தாங்கி குறத்தி மகளை மணம் முடிக்க
அண்ணனிடம் உதவிவேண்டிய குறத்தி மணவாளனே!
உயிரெல்லாம் இன்புற்றிருக்க நின் திருத்தாள் பணிகின்றேன்
நல்லூர் கந்தனே நல்லாட்சி புரியுமய்யா!

பாரதிதாசன் சத்யா, அல்வாய் வடக்கு.

## நல்லூரா வாருமையா



நாடு நலம்பெற நல்லூரா வாருமையா
புதைகின்ற ஆசாரத்தை புதிதளிக்க வாருமையா
வாருமையா வாருமையா வள்ளி தெய்வயானையுடன்
தீருமையா தீருமையா தீவினைகள் தீருமையா

மு.கேசவன், தொல்புரம்.

## சேயோனை சிந்தையில் சிந்திப்போம்!

நல்லையில் நித்தமும் நல்லருள் நலம் நீட்டி
எல்லையிலா எழிலுருவாய் எம்மனத்தே வீற்றிருந்து
வல்லமை தந்திங்கு வளமுடனே வாழ்வளிக்கும்
செல்வனாம் சேயோனை சிந்தையில் சிந்திப்போம்!

''தேமதுரன்'', தே.சுகிர்நாகேந்திரா

## நல்லூர் கந்தன் அநுபூதி



சேவற் கொடியோ னும்கை வேலும்
காவல் காக்கும் கந்தா வென்றே
கூவல் செய்யக் குறைதீர்த் தெமையாள்
பாவம் தீர்ப்பாய் பதிநல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர்.
நவ.பாலகோபால்

# சட்டம் ஒழுங்கு அமைச்சின் உதயம் காரணம் என்ன...?

சிவில் நிர்வாகத்துக்குள், இராணுவத் தலையீடுகள் அதிகரித்துவிட்டதான குற்றச்சாட்டு, அதிகரித்துள்ள சூழலில், மற்றொரு முன்னாள் இராணுவ அதிகாரி, சட்டம்ஒழுங்கு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவி வகித்த மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியே அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலராக, நியமிக்கப்பட்டிருக்கிறார்.

2005 ஏப்ரல் 25ஆம் திகதி அப்போதைய இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் படுகாயமடைந்த பின்னர், இவர் பிரதி இராணுவத் தளபதியாக பணியாற்றியிருந்தார். இவரது தலைமையின் கீழ் தான், மாவிலாற்றில் நான்காவது கட்ட ஈழப் போர் தொடங்கப்பட்டது. இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளராகவும் பதவி வகித்த மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி, இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், இந்தோனெசியாவுக்கான தூதுவராக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டார். இப்போது அவர், பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான - சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கொழும்புக்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே இந்த புதிய அமைச்சை அரசாங்கம் உருவாக்கியது. இந்தப் புதிய அமைச்சு உருவாக்கப்பட்ட அடிப்படை நோக்கமே, நல்லிணக்க



ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்று காண்பிப்பது தான்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கேற்ப பொலிஸ் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் பிடியில் இருந்து விடுவித்து சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதுவரை அரசாங்கம் அதுபற்றியெல்லாம் கண்டு கொள்ளாமலே இருந்து வந்தது. இது குறித்து சில மாதங்களுக்கு முன்னர் கேள்வி எழுந்தபோது, பொலிஸ் திணைக்களத்தை பாதகாப்பு அமைச்சிலிருந்து பிரிக்க முடியாது என்று பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார்.

திடீரென அரசாங்கம் நவநீதம்பிள்ளை வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக பொலிஸ் திணைக்களத்தை தனியாக நிர்வகிப்பதற்காக சட்டம் ஒழுங்கு அமைச்சை உருவாக்கியதன் மூலம், அதற்கான காரணம் என்ன என்பது அப்பட்டமாகவே தெரிந்தது.

யாருடைய அழுத்தங்களுக்கும் அடிபணிந்து செயற்படவில்லை என்றும், நவநீதம்பிள்ளையைக் கண்டு பயப்படவில்லை என்றும் அடிக்கடி கூறிக் கொண்ட அரசாங்கம் நவநீதம்பிள்ளையின் வருகைக்காக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதை மறுக்க முடியாது. இது அவரை அரசாங்கம் எத்தகைய கண்ணோட்டத்துடன் பார்த்தது என்பதைப் புரிந்துகொள்ள உதவியது.

நவநீதம்பிள்ளையை திருப்திப்படுத்துவதன் மூலம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், தனக்குள் நெருக்கடிகளை குறைத்துக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. அதன் ஒரு கட்டமாகவே பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சில் இருந்து விடுவிக்கப்பட்டு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

ஆனால், அரசாங்கத்தின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அரசாங்கத்தின் உள்நோக்கத்தை நவநீதம்பிள்ளை தெளிவாகப் புரிந்துகொண்டது தான்.

இந்த நடவடிக்கை அவரைத் திருப்திப்படுத்தவில்லை. என்பதை, கொழும்பு வந்த மறுநாள், நீதி அமைச்சர் ரவூப்ஹக்கீமுடன் நடத்திய



சந்திப்பிலேயே வெளிப்படையாகி விட்டது.

எதற்காக சட்டம் ஒழுங்கு என்ற புதிய அமைச்சை அரசாங்கம் உருவாக்கியது?- எதற்காக பொலிஸ் திணைக்களம் நீதியமைச்சின் கீழ் கொண்டவரப்படவில்லை என்று ஹக்கீமிடம் கேட்டிருந்தார் அவர். இது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று பதிலளித்திருந்த ரவூப் ஹக்கீம், நீதி அமைச்சின்கீழ் பொலிஸ் திணைக்களம் கொண்டுவரப்படாதது அரசாங்கத்தின் கொள்கை ரீதியான முடிவு என்றும் குறிப்பிட்டிருந்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு, பொலிஸ் திணைக்களத்தை இன்னொரு பாதுகாப்பு அமைச்சின் கீழ்கொண்டுவருமாறு பரிந்துரை செய்திருக்கவில்லை. சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவே பரிந்துரை செய்தது. நல்லிணக்க ஆணைக்குழு பொலிஸ் திணைக்களத்தை நீதிஅமைச்சின் கீழ் கொண்டு வருவது பற்றிச் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

பொதுவாக, ஜனநாயக நாடுகளில் உள்ளது போன்று நீதியமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதையே நவநீதம்பிள்ளையும் மேற்கு நாடுகளும் விரும்புவதாகத் தெரிகிறது.

ஆனால், அரசாங்கமோ, மீண்டும் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் பொலிஸ் திணைக்களத்தைக் கொண்டுவந்துள்ளது. இதனால் பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகத்துக்கும், சட்டம் ஒழுங்கு அமைச்சின் நிர்வாகத்துக்கும் இடையில் எந்த வேறுபாடும் தெரியவில்லை. இவற்றை நிர்வகிக்கும் இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் தான் வேறுவேறாக இருக்கப்போகிறதேயன்றி, நிர்வாக அணுகுமுறைகளில் எந்தவேறுபாடும் இருக்காது. இந்த உண்மையை நவநீதம்பிள்ளை புரிந்து கொண்டுள்ளதால் தான், எதற்காக நீதியமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தைக் கொண்டு வரவில்லை என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

80 ஆயிரம் பேரைக் கொண்டுள்ள பொலிஸ் திணைக்களத்தை சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வந்திருந்தாலும் இன்னமும் பொலிஸ் திணைக்களத்தின் சில பகுதிகளின் அதிகாரங்களைப் பங்கிடுவதில் பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிகிறது.

சிறப்பு அதிரடிப்படை பொலிஸ் திணைக்களத்தில் முக்கியமானதொரு பிரிவு.

சிவில் கடமைகளில் ஈடுபடும் பொலிசாரினால் சமாளிக்க முடியாத பிரச்சினைகளை எதிர்கொள் வதற்காக, உருவாக்கப்பட்டிருந்தாலும், பாதுகாப்பு அமைச்சு அல்லாத ஒரு அமைச்சின் கீழ் இதனை நிர்வகிக்க அரசாங்க உயர்மட்டம் விரும்புவதாகத் தெரியவில்லை. எனினும், முதற் கட்ட அதிகாரப்பகிர்வின்போது, விசேட அதிரடிப்படை, சட்டம் ஒழுங்கு அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தாலும், இந்த முடிவில் மாற்றங்கள் கொண்டு வரப்படலாம் என்று தெரிகிறது.

அடுத்து, இலங்கை பொலிஸ் புலனாய்வு அமைப்புகளை, பாதுகாப்பு அமைச்சில் இருந்து, சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கும் உடன்பாடு எட்டப்படவில்லை என்றே கூறப்படுகிறது.

புலனாய்வு அமைப்புகளின் மீதான கட்டுப்பாட்டை தன்வசம் வைத்திருக்க பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச விரும்புவதாகத் தெரிகிறது. அதுவே, பாதுகாப்பு உறுதிப்பாட்டுக்கு அவசியமானது என்று கோத்தபாய ராஸபக்ச கருதுகிறார். அவ்வாறு பொலிஸ் புலனாய்வுப் பிரிவுகள் பாதுகாப்பு அமைச்சின் வசம் இருந்தால், குற்ற விசாரணைகளில் துப்புத் துலக்குவதில் பாதுகாப்பு அமைச்சினால் தடைகள் ஏற்படுத்த முடியும். குறிப்பாக மனிதஉரிமை மீறல்கள் குறித்த வழக்குகளில் நடவடிக்கை எடுக்கும் போது, பாதுகாப்பு அமைச்சின் தலையீடு நிச்சயம் இருக்கவே செய்யும்.இதனை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்றே தெரிகிறது.

சுதந்திரமான ஒரு அமைப்பாக பொலிஸ் திணைக்களத்தை உருவாக்கும் திட்டத்துக்கு தடையை ஏற்படுத்தும் என்பதால், இந்த விவகாரத்தில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நகர்வுகள், சர்வதேச அளவில் அது எதிர்பார்த்த சாதகமான பலனைக் கொடுக்கும்போலத் தெரியவில்லை.

-சுபத்ரா-

# கதண்டு மகரிஷியின் கோபம்



## ஆன்மீகம் 108

தாய்பாதத்தில் கதண்டு மகரிஷி கோபத்தால், இந்து சமய அறநிலைத் துறையே நடுநடுங்கியது, உண்மை சம்பவம்.

நான் சித்தரின் அற்புத சக்திகளுடன், விட்டலாச்சாரியாவின் மாயாஜால, மர்ம ரகசியங்களையும், வருங்கால உலக இயற்கை சீற்றங்களையும் கண்டு என் இனிய ஆன்மீக மக்களை காத்திட துடித்தேன்! துவண்டேன்.! சித்தரிடம் மன்றாடினேன். எப்படியாவது நல்லவர்களை காத்திட அருள் புரியுங்கள் என்றேன்! நான் சொல்லியே கேட்காதவன், காளான் முளைக்காத காலத்தில் எது சொன்னாலும் கேளான்! வீண் முயற்சி வேண்டாம். என்றார், இல்லை மக்களுக்கு உதவி செய்தே ஆகவேண்டும் என்று கெஞ்சிக் கூத்தாடினேன். ராஜா என்று என்னை செல்லமாக அழைத்த எம்பெருமான் காகமுனிவர், உன் முயற்சியால் நீ செய்வதை யாராவது கேட்டு நடந்தால், நீ ஒருவன் ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு சொந்தக்காரன் போல், அவனும் உன்னை போல் நல்ல! விதைகளை நல்ல மனம் என்கிற மனிதனிடம் விதைப்பான்! கெட்டவன் பிழைப்பான் இருந்தாலும், உன் வேலையை செய்வது நீ. இறைவன் கட்டளை என்று கூறியதால்,

எப்படியாவது இந்து சமய அறநிலையத்தவர்களை வைத்து முக்கியமான இடங்களில் சித்தர் சபை கூடும்போது, சித்தர்களை கெஞ்சி கூத்தாடி, அவர்களை மகிழச் செய்து, நம் இனத்துமக்கள் ஒரு கோடி பேர்களை பிரம்மரிஷி மலையில் காத்திடவும், லட்சம் மூட்டை, உப்பை பாதுகாத்திடவும் நினைத்தேன்! வருங்கால கடல் கொந்தளிப்பால் அநேக நகரங்களும், ஆசியா கண்டத்திலுள்ள எத்தனையோ நாடுகளும் இருக்கும் இடம் தெரியாமல் போகப்போவதை நினைத்து! அச்சப்பட்டு எப்படியாவது உதவி செய்ய நினைத்தவனுக்கு உதைதான் கிடைத்தது.

தமிழகத்தில் இருக்கும் இந்து சமய அற நிலையம் தான் உலகத்துக்கே எடுத்துக் காட்டு. ஏன் என்றால் எது மறைந்தாலும், தாமிரபரணியில் அநேக சித்தர்களின் குகைகள் இன்றும் அழியாமல் பல லட்சக்கணக்கான வருடங்களாய் உள்ளது. திருநெல்வேலி நெல்லையப்பர் ஆதிகோயிலில் இருந்து தான் ஆட்சி, உலகம் முழுவதும் சூட்சுமமாய் நடத்தப்பட்டுள்ளது. இன்றும் நடந்து கொண்டு இருக்கிறது. நெல்லையிலிருந்து 40 கி.மீ தூரம் திருக்குறுங்குடி போகிற வழியில் திருமலை நம்பி கோயில் இருக்கிறது. இங்கிருந்து கடும் காட்டில் வனவிலங்குகள் வாழும் இடங்களில் 10 கி.மீ தூரத்தில் வலது புறம் தாய்பாதமும் இடது புறம் சுவாமி பாதமும் இருக்கிறதே. இது தான் அம்பிகையின் பாத ஸ்தலம். மேற்படி அம்பிகையின் உருவம் எங்கும் எவரும் காண முடியா ஜோதி சொரூபம்! அவர்! அவர்! உள்ளத்தில் தாயின் மகிமையைக் கண்டு, வணங்கி போற்றிய சித்தர்களை காணவந்த தாய் மனோன்மணி ஈஸ்வரி வந்து நின்ற இடத்தில் அம்பிகையின் பாத சுவடுகள் இருக்கிறது.



சதுரகிரி மலையில் திரு.வி.ராமதாஸ் கமிசனருடன் (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை) அன்னை சித்தர் யாகம் செய்தல். உடனே மழை வருதல்

மகா புண்ணியவான்களே! கலிகாலத்தில் இங்கு போகக் கூடாதவர்கள் அனைவரும் போகும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது! என் குரு சரீரத்தை விட்டு மறைந்ததும், அவர் கட்டளைப்படி இன்றுவரை மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறேன்.

நல்வர்கள், வல்லவர்கள், ஆத்மா என்றால் அன்று இருந்த அறநிலையத் துறை செயலர் அன்பர் சண்முகசிகாமணி ஐ.ஏ.எஸ் அவர்களை கூறலாம். இன்றுவரை மனதில் மாசு இல்லாதவர்.

நல்ல ஆரோக்கியத்துடன், கம்பீரமாய் ஐ.ஏ.எஸ் என்றால், இவர் ஒரு பாடப் புத்தகம் போல் பலருக்கும் பலவிதமாய் காட்சி கொடுத்தாலும் நேர்மையாய் இருந்தாலும் தக்க சமயத்தில் நல்லவர்கள் அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அவரிடம் தாய்பாதம் சென்று அம்பாளின் அருள் பெறுவோம். அப்போதுதான் இந்து சமய அறநிலையத்தின் தோஷமும் நீற்கும். தமிழகம் உலகளவில் சிறந்தோங்க மக்களும், இந்திய நாடும் சுபீட்சம் பெற செயலாற்றும் பொறுப்பு உங்களுக்கு இறைவன் கொடுத்ததால், உங்களுக்கு உதவி செய்கிறேன். (தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# CSC- ASIAN இன் புலமைப் பரிசில் திட்டம்

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்துக் கானது

வேகமாக மாறிவரும் இன்றைய இலத்திரனியல் தொழிநுட்ப உலகில் தொழிநுட்ப அறிவையும் மொழி ஆற்றலையும் மற்றும் பன்முகத்திறமைகளையும் வளர்த்துக் கொண்டாலே எமது எதிர்கால வாழ்க்கைக்கான கௌரவமான இருப்பை நிச்சயப் படுத்திக்கொள்ள முடியும்.

20 ஆண்டுகால அனுபவம் கொண்ட CSC -ASIAN COMPUTERS , சர்வதேச தரநிர்ணயங்களுக்கமைய ISO 9001:2008 சிறப்பு அங்கீகாரச் சான்றிதழ் பெற்றதும் இந்தியாவை தலைமையாகக் கொண்டதுமான CSC COMPUTER EDUCATION உயர் கல்வி நிறுவனத்துடன் இணைந்து கணனி டிப்ளோமா சான்றிதழ்களையும் தரமான அறிவையும் அனைத்து தர மாணவர்களும் பயன்பெறக்கூடிய வகையில் இலகு தவணை கொடுப்பனவின் மூலமாகவும் மாணவர்களுக்கு வசதியான நேரஅட்டவணை மூலமாகவும் நன்கு பயிற்றப்பட்ட விரிவுரையாளர்கள் துணை கொண்டு வழங்கி வருகின்றது.

CSC - ASIAN வழங்கும் அனைத்து பாடநெறிகளும் Computer Application, programming , web development & multimedia, Access Programming, English Language programme என ஆறு பிரதான பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

Office Application , IT &Web Programming, Advanced Java Programming, Web Development & Animation, Digital Video production, Graphic Design & Animation, Gigital Pre Press, 2D & 3D Animation, Maya , Master Diploma in multimedia, Master Diploma in Graphic & Animation, Tally Accounting Programme, Auto CAD & Building Studies, Hardware & Net working, Laptop Reparing & English Language Programme.

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்காக CSC-ASIAN கல்வி நிறுவனமானது ஆண்டு தோறும் Mega scholarship எனும் இலவச புலமைப்பரிசில் பரீட்சை நடாத்தி அதிகபட்சமாக 75% வரையான கட்டணக்கழிவை வழங்கி தொழிநுட்பக்கல்வியில் ஆர்வமுள்ள அனைவருக்கும் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை அளித்துவருவதுடன் பாடநெறிகளை தெரிவு செய்வதற்கு வசதியாக அது தொடர்பான வீடியோ (Demo) விளக்கங்களையும் இலவச ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் இப்பரீட்சையில் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்ற முடிவதோடு 30 நிமிடங்கள் பொது அறிவு, நுண்ணறிவு மற்றும் பாடசாலை திட்டத்திற்கமைவான 25 வினாக்களுக்கு அவர்கள் விரும்பிய மொழியிலேயே பதிலளிக்க வாய்ப்பளிக்கப்படுகின்றது. இப்பரீட்சையில் பங்குபற்றும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கேற்ப 40% தொடக்கம் 75% வரையான கட்டணக் கழிவுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டாலும் பாடவிதானங்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி.

எதிர்வரும் செப்ரெம்பர் 08ம் திகதி ஞாயிறு அன்று நடைபெறும் Mega புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலவச அனுமதிகளையும் மேலதிக தகவல்களையும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி, கிளிநொச்சி மற்றும் வவுனியா கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# BCAS இன் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

A/Lபரீட்சைகள் எழுதி முடித்து அதன் பெறுபேறுகள் வரும் வரையான காலப்பகுதியை மாணவர்கள் எவ்வாறு திட்டமிடவேண்டும் என்பதும் அக்காலப்பகுதியை எவ்வாறு பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற வழிகாட்டுதலும் மிகவும் அவசியமாகும்.

இவ்வகையில், சர்வதேச தரம்வாய்ந்த தொழிற் கல்வி மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்குவதில் இலங்கையின் முன்னோடி கல்வி நிறுவனமான BCAS CAMPUS, A/L பரீட்சையைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு களை நாடாளவிய ரீதியில் நடாத்தி இவ்விடயங்களுக்கான வழிகாட்டல்களை வழங்கி வருகின்றது. பல்துறை அனுபவம் கொண்ட உயர் கல்வி வழிகாட்டல் ஆலோசகர்கள் மற்றும் நினைவாற்றல் விருத்தி பயிற்றுவிப்பாளர்கள்(Memory Trainers) ஆகியோர்களைக் கொண்டு நடாத்தப்படவிருக்கின்ற இவ்விசேட கருத்தரங்கில்,

- ♦ பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையான A/L காலப்பகுதியை உயர்கல்வி வெற்றிக்காக எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது?
- ♦ நவீன உலகளாவிய தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய புதிய தொழில்வாய்ப்புகள் எவை?
- ♦ உங்களது தனிப்பட்ட திறன் மற்றும் ஆர்வம் என்பவற்றுக்கேற்ப எதிர்கால தொழில் இலட்சியங்களை எவ்வாறு வரையறை செய்வது?
- ♦ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் உயர்கல்வி துறையினைத் தெரிவுசெய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் என்ன?
- ♦ உலகளாவிய தொழிற் சந்தைகளில் உயர்வருமானம் பெறும் தொழில்வாய்ப்புக்களை பெறுவதற்கான வழிமுறைகளும் அதற்காக வேண்டப்படும் திறன்களும் எவை?
- ♦ நீங்கள் உயர்கல்வியைத் தொடர்கின்ற போது அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் கடைப்பிடிக்கவேண்டிய கற்றல் நுட்பங்கள் யாவை? அதற்கேற்பஉங்கள் நினைவாற்றல் திறன்களை வளர்த்துக்கொள்வது எவ்வாறு?
- ♦ உயர் கல்வி மற்றும் எதிர்கால தொழில் வெற்றிகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் உள்கள் ஆங்கில மொழித்திறனையும் ஏனைய மென் திறன்களையும் வளர்த்துக்கொள்வதற்கான மிகச் சிறந்த வழிகள் என்ன?
- ♦ நீங்கள் பல்கலைக் கழகமொன்றில் உயர் கல்வியைத் தொடர்கின்ற காலப்பகுதியில் ஏனைய தொழில்சார் (Professional Qualification) கல்வித் தகமைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் என்ன?

போன்ற மிகப் பெறுமதியான விடயங்கள் பற்றி மிகச் சிறந்த வளவாளர்களால் விளக்கமளிக்கப்படவுள்ளன. இலவசமாக நடாத்தப்படவுள்ள இக்கருத்தரங்கு பின்வரும் ஒழுங்கில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| இடம் | மண்டபம் | காலம் | நேரம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வீரசிங்கம் மண்டபம் | 07.09.2013(சனிக்கிழமை) | காலை09.00 |
| நெல்லியடி | நெல்லை முருகன் திருமணமண்டபம் | 07.09.2013(சனிக்கிழமை) | பிற்பகல் 2.00 |

குறிப்பு: இக்கருத்தரங்கில் பெற்றோர்களும் கலந்து கொள்வது மாணவர்களின் எதிர் காலம் பற்றிய திட்டமிடலுக்கு உதவுமாகையால் பெற்றோர்களும் கலந்துகொள்ளலாம்.

# போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தவே நவிஅம்மை விரும்பினார்

## ஐ.நா. மனித உரிமை அலுவலகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்த முயன்றதாக இலங்கை அரசு கூறியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது என்று ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இக் குற்றச்சாட்டு தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் போச்சாளர் ரூபேர்ட் கொல்வின் கருத்து வெளியிடுகையில்,

நவநீதம்பிள்ளை முள்ளி வாய்க்கால் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கு மரியாதை செலுத்த திட்டமிட்டிருந்ததாக கூறப்படுவது முற்றிலும் தவறானது. விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்து என்ன என்பதை அவர் தனது அறிக்கையில் தெளிவாக கூறியுள்ளார்.

வழக்கமாக மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குச் செல்லும் போது, அங்கு அவர் செய்வது போன்றே, இலங்கையிலும் போரில் கொல்லப்பட்ட அனைவருக்காகவும் மரியாதை செலுத்த நவநீதம்பிள்ளை விரும்பியிருந்தார்.

30 ஆண்டு காலப் போரில் கொல்லப்பட்ட அனைவருக்காகவும் அஞ்சலி செலுத்துவதற்கு பொருத்தமான இடமாக, போர் முடிவுக்கு வந்த அந்த முள்ளிவாய்க்கால் பிரதேசத்தை நாம் தெரிவு செய்திருந்தோம். இலங்கை அரசாங்கம் அந்தத் திட்டத்தை விதிவிலக்காக எடுத்துக் கொண்டது. இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த விரும் புவது குறித்து அறிந்து கொண்ட இலங்கை அரசாங்கம், சாதாரண மானதொரு விடயத்தை வேறு கண்ணோட்டத்துடன் பார்த்தது.

அவர்களின் கண்ணோட்டத்தைக் கவனமாக ஆராய்ந்த நாம், அது தவறாக எடுத்துக் கொள்ளப்படும் என்று உணர்ந்து, அந்தத் திட்டத்தை செயற்படுத்துவதை கைவிட்டோம்.

ஆனால், நவநீதம்பிள்ளை புலிகளுக்கு அஞ்சலி செலுத்த முயன்றதாக, இலங்கை அரசாங்கம் கூறும் குற்றச்சாட்டு அவருக்கு எதிரான காலத்தாற் பிந்திய தவறான பழியாகும்.

நவநீதம்பிள்ளை தனது இறுதி அறிக்கையில் முல்லைத்தீவு குறித்து குறிப்பிட்டபோது, மூன்று பத்தாண்டுகளாக நடந்த போரில், கொல்லப்பட்ட நாடு முழுவதிலும் உள்ள எல்லா இலங்கையர்களுக்காகவும் மரியாதை செலுத்துவதாகவும், அவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசியலில் சங்கடமான நிலைக்குள் மேர்வின் சில்வா

## அழுத்தங்களும் அதிகரிப்பு

பொதுமக்கள் தொடர்பாடல் மற்றும் பொதுமக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா, தற்போது அரசியலில் சங்கடமான நிலைக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது அரசியல் நடவடிக்கைகள் மற்றும் மகன் மாலக்கவின் நடிவடிக்கை காரணமாக மேர்வின் சில்வாவுக்கு அரசாங்க உயர் மட்டத்தில் இருந்தும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் குடும்பத்தில் இருந்தும் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக கோத்தபாய ராஜ பக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ போன்றோர் மேர்வினின் நடவடிக்கைகள் குறித்து கடுமையாக வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக முக்கிய சோதிட்க்காரர்களிடம் மேர்வின் சில்வா, தமது சோதிட நிலை குறித்து விசாரித்து வருகிறார்.

இதன் கீழ் தமது மகனுக்கு அமெரிக்காவில் அரசியல் அடைக்கலம் கோரும் வகையில் அமெரிக்கத் தூதரகத்தை நாடியுள்ளார். எனினும் மாலக்க சில்வாவுக்கு உள்ள அச்சுறுத்தல்கள் குறித்து, அமெரிக்க அதிகாரிகள் , உரிய விளக்கத்தைக் கோரியுள்ளனர்.

இந்நிலையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை அடுத்து, இலங்கையின் அமைச்சரவை மாற்றம் செய்யப்படும் போது, அதில் மேர்வின் சில்வா அகற்றப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக டி.பி.எஸ். ஜெயராஜ் தெரிவித்துள்ளார். (அ-2)

# நவிஅம்மைக்கு யாரோ தவறான தகவல்களை வழங்கிவிட்டனர்

## குமுறுகிறார் அமைச்சர் பீரிஸ்



(கொழும்பு)

பாதுகாப்பு தரப்பினர் குறித்து மக்கள் சாட்சியங்களை வழங்கிய போதிலும் அது தொடர்பாக ஒரு நல்லெண்ண வார்த்தை ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெறும் இராணுவ கருத்தரங்கில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரிடம் சிலர் தவறான தகவல்களையும் தவறான வரைவிலக்கணங்களையும் வழங்கியுள்ளனர். மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் வடக்கில் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பற்றி குறிப்பிட்டுள்ள போதும் அப்படியான எந்த குற்றச் செயலும் அங்கு இடம்பெறவில்லை. அத்துடன் மறைப்பதற்கு எதுவும் மீதமில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பை மிலேச்சத்தமான அமைப்பு என நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். ஆனால், அது ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அந்த அமைப்பு ஒரு சாதாரண அமைப்பு மட்டுமே என்றே அதில் குறிப்பிட்டுள்ளது.

உலகில் பலருக்கு ஐக்கிய நாடுகளின் அறிக்கையை காணமுடிந்தது. எனினும் அந்த அறிக்கையை பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதில் உள்ள விடயங்களை ஒரு தரப்பினர் மட்டுமே ஏற்றுக் கொண்டனர்.

இலங்கை என்பது ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக 6 வருடங்களுக்கு ஒருமுறை தேர்தலை மாத்திரம் நடத்தும் நாடு கிடையாது.

கடந்த 8 வருடங்களில் 11 தேர்தல்களை நடத்திய நாடு இலங்கை . இதன் மூலம் உலக மக்களிடம் இலங்கை தொடர்பிலான நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# நவியின் கருத்தால் முடிபை மாற்றியதாம் சுவிஸ்

இலங்கையில் தமிழர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நாயகம் நவ நீதம்பிள்ளை தெரிவித்திருந்த கருத்துக்கள் காரணமாகவே சுவிட்சர்லாந்து அரசு அங்குள்ள இலங்கை தமிழர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் இலங்கையிலிருந்து சுவிஸ் சென்றிருந்த 3 ஆயிரம் தமிழர்களில் ஆயிரம் 800 தமிழர்களுக்கு அந்நாட்டில் வசிப்பதற்கான தற்காலிக விசாவை அந்நாடு வழங்கியிருந்த நிலையில் விசா மறுக்கப்பட்ட ஆயிரத்து 200 பேரையும் நாடு கடத்தத் திட்டமிட்டிருந்தது. இந்நிலையில் நவநீதம்பிள்ளை தெரிவித்த கருத்துக்களினால் நாடு கடத்தும் திட்டத்தை சுவிஸ் அரசு கைவிட்டுள்ளது என்றும் திவயின தெரிவித்துள்ளது. (அ-2)

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இவ் ஆண்டின் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும், இலங்கை சிறுவர் நிதியமும் இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்தும் சித்திரப் போட்டிக்கான ஆக்கங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

8 முதல் 18 வயதிற்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் இப் போட்டி வயதின் அடிப்படையில் 4 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

இதன்படி 8 தொடக்கம் 10 வயது மாணவர்கள் **மகிழ்ச்சிகரமான குழந்தைப்பருவம் எமக்குத் தேவை** என்ற தலைப்பில் 8"x12" அளவுத் தாளிலும், 11 தொடக்கம் 13 வயது மாணவர்கள் **உங்களுடைய அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பும் எமக்குத் தேவை** எனும் தலைப்பில், 8"x12" அளவுத் தாளிலும், 14 தொடக்கம் 16 வயது மாணவர்கள் **எங்கள் பகாதுகாப்பு எங்கள் கைகளில்** எனும் தலைப்பில் 16"x 24" அளவுத் தாளிலும், 17 தொடக் கம் 18 வயது மணாவர்கள் **நாங் களே உலகம், நாங்களே சிறுவர் கள்** என்ற தலைப்பில் 24" x 36" அளவுத்தாளிலும் தமது ஆக்கங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வரைதற்தாளின் பின் பக்கத்தில் மாணவரின் முழுப் பெயர், வதிவிட முகவரி, வயது, பிறந்த திகதி, கற்கும் வகுப்பு, பாடசாலையின் பெயர், பிரதேச செயலகம், மாவட்டம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

மாணவரது ஆக்கம் அது என்பதை உறுதிப்படுத்தி பாடசாலை அதிபர் அல்லது கிராம சேவகர், சமயத் தலைவர் ஆகியோர் எவராவது ஒருவரின் பதவி முத்திரை இடப்பட்டிருந்தல் வேண்டும்.

இப் போட்டிக்காக அனுப்பப்படும் மாணவர்களின் ஆக்கங்கள், அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, மாவட்டச் செயலகம் என்ற முகவரிக்கு எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்களில், மாவட்ட மட்டத்தில் 10 போட்டியாளர்களின் ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத் தெரிவுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதுடன், இவ் ஆக்கங்கள் சிறுவர் தினமான எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி நெளும்பொக்கணை மஹிந்த இராஜபக்ஷ அரங்கில் நடைபெறவுள்ள சிறுவர் தின நிகழ்வில் கண்காட்சிக்காக வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர். 021 222 2774 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)



இலங்கைக்கான இந்திய தூதுவர் சிங்கா நேற்றுமுன்தினம் அரியாலை கிழக்கு நாவலடி பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட போது...

# பொதுநலவாய உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது

## வலியுறுத்தி நாளை ஆர்ப்பாட்டம்

(சென்னை)

**இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தி சென்னையில் நாளை சனிக்கிழமை விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பிலும் டெசோ அமைப்பின் சார்பிலும் கச்சதீவை மீட்டுத் தருமாறு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

அந்த வழக்குகள் தொடர்பில் மத்திய அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப் பத்திரத்தில் கச்சதீவு இலங்கைக்குத்தான் சொந்தம். அதைத் திரும்பப் பெற இயலாது என குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் அதிர்ச்சியளிக்கின்றது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் இந்த நிலைப்பாட்டை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.

கச்சதீவை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதற்கேற்ப திருத்தப்பட்ட பிரமாணப் பத்திரத்தை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் மத்திய அரசை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வலியுறுத்துகின்றது.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமை குழுவின் ஆணையர் நவநீதம்பிள்ளை இலங்கை மேலும் மேலும் ஒரு அதிகாரத்துவ அரசாகவே மாறி வருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இலங்கையில் இம் மாநாட்டை நடத்துவதற்கு இலங்கை அரசு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. அதில் கலந்து கொள்ளக் கூடாது என லண்டன் , கனடா , அவுஸ்திரேலியா முதலான நாடுகளில் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன. உலகமெங்கும் பரவி வாழும் தமிழர்களும் அதனையே வலியுறுத்தி வருகின்றார்கள்.

எனவே இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது எனவும் இதுதொடர்பில் தமது நிலைப்பாட்டை மத்திய அரசு உடனடியாக தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தியும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின் சார்பாக சென்னையில் எனது தலைமையிலும் எதிர்வரும் 12 ஆம் திகதி பிற மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சிரியாவில் இரசாயன குண்டு தாக்கு; கவலை தெரிவிக்கிறது இலங்கை

(கொழும்பு)

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் நகருக்கு அருகில், இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஆழ்ந்த கவலையை இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஒரு பாரபட்சமற்ற உரிய விசாரணைகளை நடத்த வேண்டியது இன்றியமையாத தேவை என இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்வதையும் அதனை பயன்படுத்துவதையும் அவற்றைத் தமது கையிருப்பில் வைத்திருப்பதையும் இலங்கை எதிர்க்கின்றது எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எது எப்படியிருந்த போதிலும் இலங்கை இறுதிக்கட்ட போரின் போது கொத்துக் குண்டுகள் உட்பட இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதாக சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளால் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தாதிய பற்றாக்குறையை தீர்க்க நடவடிக்கை இல்லை

## அரச தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கைஎடுக்கப்படவில்லை என அரச தாதிய உத்தியோகத்தர் சங் கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கை இல்லை என சங்கத்தின் ஏற்பாட்டாளர் சமன் ரத்ன பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அததெரண செய்திப் பிரிவு சுகாதார அமைச்சிடம் வினவிய போது, அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தாதிய பற்றாக்குறை குறித்த பிரச்சினை வைத்தியசாலைகளில் இல்லை என்றார்.

தற்போது தாதியர் பயிற்சி கல்லூரியில் பயிலும் 3 ஆயிரத்து 500 தாதியர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் நியமனம் வழங்கப்படும் என மேலும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தாதிய பயிற்சி கல்லூரிகளுக்கு அடுத்த வருடம் 6 ஆயிரத்து 25 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாதிய பற்றாக்குறையால் நாட்டில் எந்தவொரு வைத்தியசாலையிலும் வேலை தாமதம் இல்லை என அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# ஆணைக்குழுக்கள் மஹிந்தவின் முகவர்களாகவே உள்ளனர்

ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முகவர்களே நியமிக்கப்படுகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழுவை அமைத்து பொலிஸ் சேவைக்கு முக்கிய இடம் முன்னர் வழங்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 17 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்தது.

தற்போது ஆணைக்குழு குழுக்களுக்காக நியமிக்கப்படுவோர் சுயாதீனமானவர்கள் அல்லர். இவர்கள் ஜனாதிபதியின் முகவர்களே.

பொலிஸ் திணைக்களத்தில் 75 வீதமானவர்கள் நேர்மையாகவே செயற்படுகின்றனர். பாதுகாப்புப் படையினருடன் ஒப்பீடு செய்யும் போது பொலிஸாரின் வேதனங்கள் மிகவும் குறைவாக காணப்படுகின்றன. (அ-2)

# புலிகளை தோற்கடித்தமைக்கு இந்திய அரசு சார்பில் நன்றி

## சுப்பிரமணியன் சுவாமி கூறுகிறார்



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை இலங்கை அரசாங்கம் யுத்தத்தின் மூலம் தோற்கடித்தமைக்கு இந்திய அரசாங்கம் நன்றி தெரிவிப்பதாக இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியன் சுவாமி கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர், உள்ளூர் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்த பின்னர், இலங்கையில் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்தி இந்தியாவில் உள்ள தமிழ் மக்களை ஆச்சரியமடைய வைத்துள்ளது.

இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை வழங்க இந்தியா தயாராகவுள்ளது என்றார். இதேவேளை கொழும்பில் இலங்கை இராணுவத்தின் மூன்றாவது பாதுகாப்பு கருத்தரங்கில், இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி உட்பட 20 இந்திய பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

**போருக்கு பின் இலங்கை-சவால்களும் பிராந்திய உறுதிப்பாடும்** என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம் முதல் 3 நாட்கள் கருத்தரங்கை இலங்கை இராணுவம் நடத்தி வருகிறது. இதில் 66 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கடும்போக்கு தமிழ் தேசிய எதிர்ப்பாளரான ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி உட்பட 20 பேர் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (அ-2)





- 1522 -பேர்டினணட் மகலனின் விக்டோரியா கப்பல் உயிர் தப்பிய 18 பேருடன் ஸ்பெயினை வந்தடைந்து, முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பல் என்ற பெயரைப் பெற்றது.
- 1873 - இலங்கையில் புதிதாக வடமத்திய மாகாணம் அமைக்கப்பட்டு, மொத்தம் இலங்கையின் மாகாணங்கள் ஏழாக அதிகரிக்கப்பட்டது. ஜே. இ. டிக்சன் அதன் முதலாவது அரச அதிபர் ஆனார்.
- 1885 - கிழக்கு ருமேலியா பல்கேரியாவுடன் இணைந்தது.
- 1936 - கடைசி தாஸ்மானியப் புலி தாஸ்மானியா, ஹோபார்ட்டில் இறந்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: தென்னாபிரிக்கா ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1946 - இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி டி. எஸ். சேனநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - கனடாவின் முதலாவது தொலைக்காட்சி நிலையம் மொன்ட்றியாலில் திறக்கப்பட்டது.
- 1951 - தினமலர் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1965 - இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியா பாகிஸ்தானைத் தாக்கி, லாகூரை ஒரு மணி நேரத்தில் கைப்பற்றப் போவதாக அறிவித்தது.
- 1966 - தென்னாபிரிக்க பிரதமர் ஹெண்ட்ரிக் வேர்வேர்ட் நாடாளுமன்ற அமர்வின் போது குத்திக் கொலை செய்யப்பட்டார்.
- 1968 - சுவாசிலாந்து ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1991 - ரஷ்யாவின் லெனின்கிராட் நகரம் மீண்டும் சென் பீட்டர்ஸ்பேர்க் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1997 - வேல்ஸ் இளவரசி டயானாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. 2.5 பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர்.
- 2006 - ஐரோப்பியத் தமிழ் வானொலி, மக்கள் தொலைக்காட்சி ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.

**சிறப்பு தினங்கள்**

- பாகிஸ்தான் - பாதுகாப்பு தினம்
- சுவாசிலாந்து - சுதந்திர தினம் (1968)

# அமெரிக்காவில் இருந்து...



அமெரிக்காவை சேர்ந்த புல்லெட்டா மோட்டார்ஸ் நிறுவனம் சுப்பர் கார் தயாரிப்பில் இறங்கியுள்ளது. சுப்பர் கார் தொழில்துறை எப்போதுமே சவால்கள் நிறைந்ததாக உள்ளதால் பல நிறுவனங்கள் இத் துறையிலிருந்து காணாமல் போயுள்ளன. சமீபத்தில் கூட கும்பர்ட் நிறுவனம் கூட தனது வர்த்தகத்தை நிறுத்திக் கொண்டுள்ளது.


இந்த நிலையில், புல்லெட்டா மோட்டார்ஸ் மிகுந்த நம்பிக்கையுடன் இந்த துறையில் கால் பதித்துள்ளது.

புல்லெட்டா மோட்டார்ஸ் லாக்ஹீடு மார்ட்டின் எஃப் ராப்டர் போர் விமானத்தின் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை வைத்து ஆர்எஃப் 22 என்ற பெயரில் புதிய சுப்பர் காரை அறிமுகம் செய்துள்ளது.

லோட்டஸ் எவோரா சுப்பர் காரை அடிப்படையாகக் கொண்டு இந்த புதிய கார் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த கார் 1,324 கிலோ எடை கொண்டது.

# தொழில்நுட்ப திருவிழா



. இன்று முதல் (செப்டெம்பர் 6) 11 ஆம் திகதி வரை பேர்லினில் நடைபெறும் IFA 2013 விழாவைதான் தொழில்நுட்ப உலகமே எதிர்நோக்கி உள்ளது. இதை ஒரு தொழில்நுட்ப திருவிழா என்றே அழைக்கலாம் ஏனென்றால் உலகில் உள்ள பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்களும் இந்த விழாவில் தான் தங்களது புதிய படைப்புகளை வெளியிடுவார்கள்.

சாம்சங், சொனி, எல்ஜி, ஹச்டிசி போன்ற முன்னனி நிறுவனங்கள் இந்த விழாவில் தங்களது புதிய மொபைல்கள், டேப்லெட்கள், ஸ்மார்ட் கடிகாரம் போன்றவற்றை வெளியிட உள்ளார்கள்.

IFA என்றால் Internationale Funkausstellung என்பதின் சுருக்கமே IFA ஆகும். IFA ஜேர்மனியில் நடைபெறும் ஒரு தொழில்நுட்ப கண்காட்சியாகும். 1924 ஆம் ஆண்டு இது தொடங்கப்பட்டது. 1924 ஆம் ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டு வரை இந்த கண்காட்சி வருடம் ஒரு முறை தவறாமல் நடத்தப்பட்டது. அதன் பின்னர் ஒழுங்காக நடைபெறவில்லை. பின்னர் 1950 முதல் 2005 வரை இந்த கண்கர்ட்சி இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நடைபெற்றது. அதன்பின் மீண்டும் இது வருடம் தவறாமல் நடைபெறுகிறது.

இது சாதாரண கண்காட்சியாக ஆரம்பத்தில் தொடங்கப்பட்டாலும் இன்று தொழில்நுட்ப உலகிற்கு இந்த கண்காட்சி ஒரு மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். உலகில் பல முன்னனி நிறுவனங்களின் படைப்புகள் இதில் பங்கு பெறுவதால் தொழில்நுட்ப உலகிற்கு இந்த நிகழ்வு ஒரு மிகப்பெரிய திருவிழாதான். இது வெறும் கண்காட்சியாக மட்டும் அல்லாமல் பல நிறுவனங்களின் படைப்புகள் ஒன்று கூடும் தளமாக விளங்குகிறது. இதில் வியாபாரம் மற்றும் விளம்பரம் சம்பந்தப்பட்ட விடயங்களும் இதில் அடங்குகின்றன.

# மைக்ரோசொப்ட் நிறுவனம் நொக்கியாவை வாங்குகிறது?




உலகின் முன்னணி கைபேசி தயாரிப்பு நிறுவனமான நொக்கியாவை மைக்ரோசாப்ட் நிறுவனம் வாங்கவுள்ளது.

மிக வேகமாக மாறிவரும் தொழிலநுட்பத்திற்கு ஏற்றவாறு நிறுவனங்கள் போட்டிபோட தொடங்கிவிட்டதால், சாம்சங், சோனி, ஆப்பிள்போன்றன நொக்கியாவின் இடத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிட்டது.

இந்நிலையில் நெருக்கடியான சூழலில் நொக்கியாவை வாங்க மைக்ரோசாப்ட் முடிவு செய்துள்ளது.

அதாவது 7.17 பில்லியன் டொலர்களுக்கு நோக்கியாவை . வாங்குகிறது.

மேலும் நொக்கியா நிறுவனத்தின் தலைமை செயல் இயக்குநரான ஸ்டீபன் எலோப் மீண்டும் மைக்ரோசொப்டிலேயே இணைவார் என்றும் தெரிகிறது.

இவர் மைக்ரோசொப்டில் இருந்து தான் நோக்கியாவுக்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மைக்ரோசாப்டின் இப்போதைய தலைவரான பால்மர் விரைவில் பதவி விலக உள்ள நிலையில், ஸ்டீபன் எலோப் மைக்ரோசொப்டின் தலைவராகவும் வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கணனியில் உள்ள தற்காலிக கோப்புக்களை நீக்க

கணனியில் தங்கும் தற்காலிக கோப்புக்கள் மற்றும் தேவையற்ற கோப்புக்களை நீக்கி அதன் வேகத்தை அதிகரிப்பதற்கு பல்வேறு மென்பொருட்கள் காணப்படுகின்றன. இதேவேளை கிளவுட் முறை எனப்படும் ஒன்லைன் மூலமும் இவ்வாறான சேவைகளைத் தரும் அப்ளிகேஷன்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றின் வரிசையில் Piriform எனும் நிறுவனமானது தற்போது Agomo எனப்படும் அப்பிளிகேஷனை உருவாக்கியுள்ளது.

கிளவுட் முறை மூலம் கணனியில் காணப்படும் தேவையற்ற மற்றும் தற்காலிக கோப்புக்களை நீக்கி அதன் வேகத்தை அதிகரிக்கும் ஆற்றல் கொண்டது. இந்த அப்பிளிகேஷன் இணைய உலாவி மூலம் உங்கள் கணனியை தொடர்ந்து கண்காணித்த வண்ணம் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கழுத்து மற்றும் இடுப்புப் பட்டியில் அணிந்து பயன்படுத்த...




கழுத்து மற்றும் இடுப்புப் பட்டி போன்றவற்றில் அணிந்து பயன்படுத்தக்கூடிய சிறிய ரக Smart HD Camera ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ParaShoot 2.0 எனப்படும் இக்கமெரா ஆனது 45 x 45 x 15 மில்லிமீற்றர் கன பரிமாணத்தைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் எடையானது 1.3 அவுன்ஸ் ஆகவும், 100 டிகிரி பார்வைக்கோணத்தைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.

இவை தவிர சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவும் தரப்பட்டுள்ளது.

# ஜப்பானில்....



உலகில் சிறந்த தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைக் கொண்ட நாடாக விளங்கும் ஜப்பான் விரைவில் 220 Mbps வேகத்தினைக் கொண்ட தரவுப்பரிமாற்றத்துடன் கூடிய இணைய இணைப்பினை வழங்கவுள்ளது.

KDDI எனும் நிறுவனத்தினால் 2014ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இச்சேவையானது தற்போது உள்ள வேகத்தினை விடவும் 32 சதவீதம் அதிகமாக இருக்கும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

# இலங்கை வந்ததும் புலிகள் குறித்து நவி அம்மை தெரிந்து கொண்டார்

## அத்துரலிய ரத்னதேரர் எம்.பி.தெரிவிப்பு

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவ நீதம்பி . ள்ளை போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு சாதகமாகச் செயற் பட்டிருந்தாலும் இலங்கை விஜயத்தின் பின் னர் நடுநிலையான ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியதாக ஜாதிகஹெல உறுமய வின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதவுரிமை ஆணையாளர் விடுதலைப் புலிகள் அமைப்பு மிலேச்சத்தனமான அமைப்பு என்று ஏற்றுக் கொண்டுள்ளார். அத்தோடு தமிழ்மக்கள் இனவாதத்தை நோக்கி செல்லும் வகையிலும் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில் பிள்ளை அம்மையார் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார். இதனால் அவரது கருத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துக்களை எம்மால் வெளி யிடமுடியாது. அவர் மனித உரிமை ஆணைக் குழுவில் அறிக்கை ஒன்றைசமர்ப்பிக்கவுள்ளார்.

அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஜாதிக ஹெல உறுமய தனது நிலைப்பாட்டை வெளியிடும் என்றார். (அ-2)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண் மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

**இதோ பாவியுங்கள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால் பொன்னாங்காணி தைலம் வாங்கும்போது வர்ண மூடியில் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் ஒறிஜினல் என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

Manufactured by:
**Sithara Products**
Puttalam Road, Chilaw
(Reg.No: 63 82)
AR/PR/No 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567

(தி/4609)



# பன்னிரு ஜோதிலிங்க தரிசனம்

நல்லூரில்

# வீரமாகாளியம்மன் கோவில் மண்டபம்




## செப்டெம்பர் 07 சனிக்கிழமை வரை

## தினசரி காலை 8.00 மணி - இரவு 8.00 மணி

ஏற்பாடு:
யாழ் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்
211, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம் | 077-2612088

(இ)



DHL EXPRESS **வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

220றிற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

- 11kg மேற்பட்ட பொதிகளுக்கு கட்டணச் சலுகை, கடலுணவு, மருந்து பொருட்கள், எண்ணை, பழவகைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- உங்கள் இல்லங்களில் வந்து பொருட்களை பொறுப்பெடுத்து வெளிநாடுகளில் உரிய முகவரியில் ஒப்படைக்கும் சேவை.




**திருமுருகன் கொம் நெற்** DHL EXPRESS
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6



வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION
MMBL Money Master
46, Adiyapathum Veethy, Thirunalvely. (தி/4598)




சகல நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
கனடா, லண்டன், இந்தியா ஆகியவற்றுக்கான Online Visa விண்ணப்ப சேவையினைப் பெற்றுக்கொள்






## புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

## ஷைலோ ஐஸ்கிறீம்


No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)

# பேருந்து சேவையை ஏற்படுத்தி தாருங்கள்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முத்தையன் கட்டுக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 1984 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச பேருந்து சேவை நடைபெறவில்லை என அப்பகுதி மக்களும் பயணிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.**



முல்லைத்தீவில் இருந்து முத்தையன் கட்டு, ஒட்டுசுட்டான், வித்தியாபுரம், முத்துவிநாயகபுரம், முத்தையன் கட்டுக்குளம், கனகரத்தினபுரம் ஊடாக முல்லைத்தீவு செல்லும் பாதைக்கே அரச பேருந்து சேவை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு இந்த அரச சேவை இடம்பெறாமையால் ஒட்டுசுட்டான், வித்தியாபுரம், முத்துவிநாயகபுரம், முத்தையன் கட்டுக்குளம், கனகரத்தினபுரம், கூழாமுறிப்பு, புளியங்குளம், கருவேலன் கண்டல், கணேசபுரம், தட்டயமலை ஆகிய கிராமங்களில் உள்ள ஆயிரத்து 986 குடும்பங்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவர்கள் விவசாயத்தொழிலையே தமது வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்ற நிலையில் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள், பயணிகள் இதனால் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற அரச பேருந்து சேவை, 1984 ஆம் ஆண்டுக்கு பின்னர் இதுவரையில் இடம்பெறவில்லை.

எனவே, இத்துறை சார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனம் எடுத்து போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)




## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

(மல்லாவி)

மாட்டுவண்டி சவாரிப் போட்டி ஒன்று கலைமகள் விளையாட்டுகழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி பி.ப.2மணிக்கு வவுனிக்குளம் துரைசிங்கம் விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில்உள்ள A,B,C,D தரங்களைஉடைய மாட்டுவண்டி சவாரியாளர்கள் பங்குபற்றமுடியும். போட்டியில் முதல் இடத்தை பெறுபவருக்கு துவிச்சக்கரவண்டியும் ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற 0774250898 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## விருதுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

சிறிலங்கா யூத் இளைஞர் விருதுப் போட்டி இம் மாத இறுதிவாரத்தில் நடத்தப்படவுள்ளது.

இதில் 13 வயது முதல் 29 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றமுடியும்.

தமிழ்மொழி மூல போட்டிகளாக அறிவிப்பாளர், பேச்சு, இளம் பாடகர், கிராமியப்பாடல் பெண், கிராமியப் பாடல் ஆண், கிராமிய நடனம் குழு(பெண்), கிராமிய நடனம் குழு (ஆண்), கிராமிய நடனம் (இருபாலாரும்), புத்தாக்க நடனம் குழு (பெண்), புத்தாக்க நடனம் குழு (ஆண்), புத்தாக்க நடனம் (இருபாலாரும்) ஆகியவை இடம்பெறவுள்ளன.

ஆங்கில மொழி போட்டிகளாக அறிவிப்பாளர், பேச்சு ஆகியன இடம்பெறவுள்ளன.

சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளுக்கான பொதுப் போட்டிகள் பரத நாட்டியம் தனி (பெண்), சாஸ்திரிய இசை மிருதங்கம், சித்திரம் ஆகிய போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

மாற்றுவலுவுடையோர்களுக்கும் போட்டிகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர், எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட காரியாலயம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். இப்போட்டிகள் தொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் 021 2285547 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும். (ம-254)





யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் 4 கோடியே 40 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட முல்லைத்தீவு பொதுச் சந்தையை நேற்று வியாழக்கிழமை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன் திறந்து வைத்த போது... (படங்கள்:- முல்லைத்தீவு செய்தியாளர்)

**வலம்புரி செய்தியையடுத்து**

## முள்ளியவளை பொதுச்சந்தையை புனரமைப்பதற்கு நடவடிக்கை

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மாவட்டகரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வந்த முள்ளியவளை பொதுச் சந்தையை புனரமைப்பதற்குகென 35 இலட்சம் ரூபா பணம் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப் பொதுச் சந்தை பல வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாகவும் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும் வலம்புரி நாளிதழ் சுட்டிக்காட்டியிருந்தது.

இதனையடுத்து, இச்சந்தையின் வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் சந்தையை புனரமைப்பதற்கும் இந்நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

தேர்தல் முடிந்தவுடன் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-267)

## மின்சாரம் இன்மையால் இருளில் மூழ்கும் கிராமங்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டகரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு ஆகிய கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் இப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அளம்பில் வடக்கில் 149 குடும்பங்களும் அளம்பில் தெற்கில் 286 குடும்பங்களும் வசித்து வருகின்ற நிலையில், 20 குடும்பங்களுக்கும் அளம்பில் கிராமத்தில் அமைந்துள்ள புனிதஅந்தோனியார் ஆலயத்திற்கும், அங்கு அமைந்துள்ள பாடசாலை ஒன்றுக்கும் கமநல சேவை நிலையத்திற்கும் மட்டுமே மின் சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளான இரண்டு முன்பள்ளிகள், பாடசாலைகள், சந்தை, பலநோக்கு கூட்டறவுச் சங்கம், பொது நோக்கு மண்டபம், பிரதேச வைத்தியசாலை, மீனவர் ஓய்வு மண்டபம், உணவகம், கடைகள் என்பன மின்சாரம் வழங்குவதில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முல்லை. மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில் செல்வனிடம் வினவிய போது இக் கிராமங்களுக்கு வடக்கின் வசந்த திட்டத்தின் மூலம் இலவச மின் இணைப்பை பெறுவதற்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் விரைவில் மின்சாரம் வழங்குவதற்கு தாம் முயற்சி எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம-267)

முட்டாள் என்பவன் யார் தெரியுமா? தன்வியாதிக்காக டாக்டரிடம் போய் தன் சொத்துக்களுக்கு அவரையே வாரிசாக்குகிறானே அவன்தான்.
– பெஞ்சமின் ஃப்ராங்க்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாறுவேடத்திலேனும் சென்று மக்களைச் சந்தியுங்கள்

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அன்பு வணக்கம். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் உங்களுக்கு முதலில் எம் வாழ்த்துக்கள்.

தேர்தலில் போட்டியிடும் சிலரின் முகங்கள் அறிமுகமானவையாயினும் பல முகங்கள் தெரியாதவையே.

இருந்தும் உங்களின் வர்ணப்புகைப்படங்கள், சுவ்பிய கையுடனும் அபயமளிக்கும் கரத்துடனும் பார்க்கும் இடம் எங்கும் காட்சி தருவதால், பலரை இனம் கண்டுகொள்ள முடிகிறது. இன்னும் சிலரோ வெளி (யில்) வராத வேட்பாளர்களாக அருவத் திருமேனியுடன் போட்டியிடுகின்றீர்கள்.

பரவாயில்லை. தோல்வி நிச்சயம் என்று தெரிந்த பின்பு ஏன்தான் தேவையற்ற பிரசாரம் என்று நீங்கள் நினைப்பதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

ஒரு அறிஞன் சொல்கிறான், 'கடுமையான போட்டி என்றால் அதில் பங்குபற்றாமல் அல்லது அதிலிருந்து விலகுவது புத்திசாலித்தனம்' என்று.

அந்த அறிஞனின் கருத்துக்கு அமைய, நீங்கள் செயற்படுவதாக இருந்தாலும் பரவாயில்லை வேட்பு மனுத்தாக்கலில் கிடைக்கும் இலாபத்தைத் தெரிந்து கொண்ட புத்திசாலித்தனம் என்று இதனைக் கூறிக்கொள்ளலாம்.

இவை வேட்பாளர்கள் பற்றிய ஒரு பொதுக் குறிப்பு.

இப்போது நல்லூர்க் கந்தனின் மகோற்சவமும் நிறைவடைந்துள்ளது. நல்லூர்க்கந்தப் பெருமானின் நினைப்பில், தேர்தல் பற்றி அறவே நினைத்துப் பார்க்காத இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு வடக்கு மாகாண சபைத் தேர்தல் வந்த செய்தியை நீங்கள் நினைப் பூட்டியாக வேண்டும். அதற்காகவேனும் நீங்கள் ஒவ்வொரு தமிழ் மக்களுக்கும் உங்கள் திருமுகத்தைக் காட்டுவது பொருத்துடையதாகும்.

இதற்கு அப்பால், தேர்தல் பற்றி, வேட்பாளர்கள் பற்றி, வாக்களிப்புப் பற்றி, வேட்பாளர்கள் ஆற்றும் உரைகள் பற்றி, வாக்காளப் பெருமக்கள் என்ன கதைக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்வதும் கட்டாயமானதாகும்.

வாக்காளர்களின் கருத்துக்களை அறியாமல் வேட்பாளர்கள் பிரசாரம் செய்வதென்பது பொருத்தமற்ற விடயம்.

முதலில் வாக்காளப் பெருமக்களின் மன நிலை எவ்வாறு உள்ளதென்பதை அறிந்து பாருங்கள். அவர்களில் மன நிலையின் அடிப்படையில் அதனைப் பிரதிபலிக்கும் வகையில் தேர்தல் விஞ்ஞாபனமும் பிரசாரமும் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

இதைவிடுத்து தேவாரத் திருமுறைக்கு திருச்சிற்றம்பலம் என்று உரைப்பது எத்துணை முக்கியமோ அதுபோல, தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு; ஐக்கிய இலங்கைக்குள் தீர்வென்றுரைப்பது அவசியம் எனக் கருதி தப்பிப்பிழைக்கும் தந்திரோபாயத்தில்தேர்தல்விஞ்ஞாபனம் தயாரிக்கப்படுகிறது.

மக்கள் சந்திப்பில், தமிழர்களுக்கு நாடும் அரசும் தேவை என்று கூறப்படுகிறது. இத்தகைய வேறுபட்ட கருத்துக்கள் அவ்வளவு நல்லதல்ல. இத்தகைய உங்களின் தந்திரங்களை மக்கள் தங்களுக்குள் கூறிச் சிரிப்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்களின் இரட்டை வேடங்களை களையாவிட்டால் மக்கள் வாக்களிக்க முன்வர மாட்டார்கள். எனவே மக்களின் கருத்துக்களை மாறு வேடத்திலேனும் சென்று கேட்டறிந்து கொள்ளுங்கள்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முன் ஆஜராக போவதில்லை

## முன்னாள் நீதியரசர் ஷிராணி

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னிலையில் எதிர்காலத்தில் ஆஜராகப் போவதில்லை என முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் நேர்மைத்தன்மை குறித்து தனக்கு நம்பிக்கை கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பக் கச்சார்பானவை எனவும் அரசியல் ரீதியாக பழி வாங்கும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் தமக்கு எதிராகவே அமைந்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, விசாரணைகளின் மூலம் நியாயமான தீர்ப்பு கிட்டும் என்பதில் நம்பிக்கையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விசாரணை முடிவில் வழங்கப்படவுள்ள தீர்ப்பு குறித்து அரச ஊடகமொன்று அண்மை யில் கட்டுரையொன்றை வெளியிட்டுள்ளதாகவும் இதன்மூலம் தமது கட்சிக்காரருக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு முன்கூட்டியே தீர்மானிக் கப்பட்டுள்ளதாக ஷிராணி பண்டாரநாயக் கவின் சட்டத்தரணி நலின் லந்துவே ஹெட்டி தெரிவித்துள்ளார். (அ-2)

# சட்டவிரோத ஆஸி. பயணம்; இதுவரை 4100 பேர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்வதற்கு முயற்சித்த, 4 ஆயிரத்து 100 பேர் இதுவரையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படை பேச்சாளர், கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில், வெளிநாடுகளுக்கு செல்வதை தடுக்கும் நோக்கில், நாட்டை சூழ கடற்படையினர் ரோந்து நடவடிக்கை யில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கடற் படை பேச்சாளர் கூறியுள்ளார்.

வெளிநாடுகளுக்கு நபர்களை அனுப்பும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நால்வர் அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு இவர்கள் 5 தொடக்கம் 8 இலட்சம் ரூபா வரையில் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பரிசளிப்பு விழா

மட்டுவில் சிறிநாராயணன் (கண்ணன் கோவில்) தேவஸ்தான அறநெறிப் பாடசாலை யின் வருடா ந்த பரிசளிப்பு விழா நாளை மறு தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எஸ்.கிருஸ்ணன் தலை மையில் கோயில் வளாகத்தில் நடைபெறவு ள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலு வலர் வே.தபேந்திரன் கலந்து கொள்ளவுள் ளார். அறநெறிப் பாடசாலை மாணவர்களு க்கு பரிசில் வழங்கப்படவுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (அ-2)

# யாழுக்கு வருகிறார் பசில் ராஜபக்ஷ

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் குமாரு சர்வானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஐ.ஓ.சி தனியார் பெற்றோல் நிரப்பு நிலைய வளாகத்தில் மாலை 4 மணியளவில் இடம்பெறும் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பஷில் ராஜபக்ஷ கலந்து கொள்வார் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-6)




### மயங்காதிரு மனமே!

நபியே!: " மது மற்றும் சூதாட்டம் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறுவீராக! அவ்விரண்டிலும் பெருங்கேடு இருக்கிறது. அவற்றில் மக்களுக்கு சிறிது பயன்கள் இருப்பினும் அவற்றினால் ஏற்படும் பாவம் அவற்றின் பயனைவிட அதிகமாக இருக்கின்றது." (திருக்குர்ஆன் 2:219)




தீய செயற்பாட்டைச் செய்வதற்கு மனிதனுக்கு உடல் காரணம் என்பதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. உடல் நீண்ட காலம் நிலைத்து இருக்கவேண்டும் என்பதே மனிதருடைய ஆசை யாகவும் உள்ளது. ஆனால் உடம்பு நோய்களால் அழியும் என்பது இன்று எல்லோரும் அறிந்த உண்மையாக உள்ளது. மணிவாசகர் உடலைச் **சிதலைச் செய் காயம்** எனக் குறிப்பிட்டுள்ளார். சிதலை என்பதன் பொருள் உடலோடு ஒட்டி நீண்ட நாள் நிற்கும் துன்பந்தரும் நோயாகும். அத்தகைய நோய் ஒழுக்கச் சீர்கேட்டால் ஏற்படும் என்பதையும் மணிவாசகர் உய்த்துணர வைத்துள்ளார்.

வழியாட்டு நடைமுறைகளால் உடல் நலம் பெறலாம் என்பதையும் அவர் வலியுறுத்துகின்றார். தன்னுடைய வாழ்வியல் அனுபவத்தின் மூலமே இக் கருத்தை முன்வைக்கிறார்.

**முதலைச் செய்வாய்ச்சியர்** என ஒரு குறிப்பிட்ட பெண்களைக் குறிப்பிடுகிறார். முதலை போன்ற சிவந்த வாயுடைய மகளிர் கடிப்ப அதனால் அவர் மீது உண்டாகிய விருப்பமாகிய வெந்நீரிடத்து முழுகியும் நடுக்கத்தையுணரும் என்னைக் கைவிட்டுவிடாதே! என இறைவனை வேண்டுகிறார். ஊன் நிறைந்த உடலே தன் துன்பத்திற்குக் காரணம் எனக்கூறுகிறார். எனவே உடலோடு தான் வாழ விரும்பவில்லையெனவும் அதனால் அனுபவிக்கும் துன்பத்தைப் பொறுக்கமுடியாதென்றும் கூறுகிறார். சிவனே முறையோ முறையோ என்று புலம்புகிறார். அப்போது பூண்முலை மங்கை பங்கா! என சிவனை விளிக்கிறார்.

துன்பந்தீர்க்கும்அருள்புரியும்கோலம் அணிகலன்கள் அணிந்த முலைகளையுடைய உமையுடன் இருக்கும் கோலமே. சிவகதிபெற மணிவாசகர் இறைவனிடம் எல்லாவற்றையும் கூறுவது பொருத்தமெனஎண்ணுகிறார். அவர் முறையோ முறையோ எனக் கேட்பதற்கும் ஒரு காரணம் உண்டு. இந்த உடம்புடன் சில காலம் இருக்குமாறு பணித்துப் பின்னர் பிரிந்து விட்டமையால் இறைவனிடம் எல்லாக் குறைகளை முன்வைத்து வேண்டுதல் செய்கிறார்.

உலகவாழ்வியலில் உடலைக் கொண்டு அனுபவிக்கும் இன்பம் தீராத நோய்களைத் தரும் என்பதை இப்போது பல மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

இன்று புற்றுநோய் என்னும் பயங்கர நோய் உலகெங்கும் பரவியுள்ளது. அதற்கான மருத்துவ விளக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன. மணிவாசகர் பாடலில் குறிப்பிடும் **திதிலைச் செய் காயம்** என்ற தொடர் பிறிதொரு பொருளையும் ஊகிக்கவைக்கிறது. திதிலை என்ற சொல் அரிக்கும் ஒரு உயிரினத்தைக் குறிக்கும். அதனை இணைத்துப் பார்க்கும்போது உடலை அரிக்கும் கிருமிகளைக் கொண்ட தீராத வியாதி ஒன்றையே அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். அது புற்றுநோயாக இருக்குமோ என்ற கேள்வியும் தோன்றுகின்றது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மருந்து நிலையில் வழிபாடே பயன் தரும் என்ற கருத்தும் வெளிப்படுகிறது. மணிவாசகருடைய வாழ்க்கையனுபவம் பக்தி நெறியில் அவர் செல்நெறிக்கு எத்துணை இடையூறாக இருந்துள்ள தென்பதை அவரே பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அதனால் உலகவாழ்க்கை இன்பமானது என்ற நம்பிக்கையோடு இருப்பவர்களை சுயவிமர்சனம் செய்யத் தூண்டுகிறது.

**முதலைச் செவ்வாய்ச்சியர் வேட்கை**
**வெந் நீரிற் கடிப்ப மூழ்கி**
**விதலைச் செய்வேனை விடுதிகண்டாய்**
**விடக் கூன் மிடைந்த**
**சிதலைச் செய் காயம் பொறேன்**
**சிவனே முறையோமுறையோ**
**திதிலைச் செய் பூண்முலை மங்கை**
**பங்கா வென் சிவகதியே**

# அமெரிக்க டெனிஸ் தொடரில்...

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெறும் திறந்த டெனிஸ் தொடரின் அரையிறுதிக்கு ஸ்பெயினின் நடாலும் காலிறுதிக்கு பெலாரசின் அசரன்காவும் முன்னேறியுள்ளனர். இத்தொடரில் சுவிட்சர்லாந்தின் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில், நடைபெறும் திறந்த டெனிஸ் சுற்றுப்போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்றில் 'நம்பர்-2' வீராங்கனை பெலாரசின் அசரன்கா, சேர்பியாவின் அனா இவானோவிச்சை எதிர் கொண்டார். இதில் முதல் செற்றை 4-6 என இழந்த அசரன்கா, அடுத்த இரண்டு செற்களையும் 6-3, 6-4 என அசத்தலாக கைப்பற்றினார். முடிவில், அசரன்கா 4-6, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

### பெடரர் அதிர்ச்சி:

ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில், 17 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற பெடரர், உலகின் 19ஆவது இடத்திலுள்ள ஸ்பெயினின் டாமி ராபர்ட்டோவை சந்தித்தார்.

'டைபிரேக்கர்' வரை சென்ற முதல் செற்றை பெடரர் 6-7 என, இழந்தார். தொடர்ந்து தடுமாறிய இவர், அடுத்த இரு செற்களையும் 3-6, 4-6 என கோட்டைவிட்டார். முடிவில் பெடரர், 6-7, 3-6, 4-6 என்ற நேர்செட்களில் தோல்வியடைந்து வெளியேறினார்.

இதற்கு முன் பெடரருக்கு எதிரான 10 போட்டிகளில் தொடர்ந்து தோல்வியடைந்த ராபர்ட்டோ, 11ஆவது போட்டியில் வெற்றி பெற்றார்.

### நடால் அபாரம்:

உலகின் இரண்டாம் நிலை வீரரும், 2010ஆம் ஆண்டு சம்பியனுமான ரபெல் நடால் (ஸ்பெயின்) கால் இறுதி ஆட்டத்தில் சக நாட்டைச் சேர்ந்த 19ஆம் நிலை வீரர் டோமி ராபர்ட்டோவை எதிர்கொண்டார்.

இதில் நடால் 6:0, 6:2, 6:2 என்ற நேர் செட் கணக்கில் வென்று அரை இறுதிக்கு முன்னேறினார். இந்த வெற்றியை பெற அவருக்கு 1 மணி 40 நிமிட நேரம் தேவைப்பட்டது.

12 கிராண்ட்சிலாம் பட்டம் வென்ற நடால் அமெரிக்க திறந்த சுற்றுப் போட்டியில் 5ஆவது முறையாக அரை இறுதியில் நுழைந்துள்ளார்.



அசரன்கா

# அயர்லாந்தை வீழ்த்தியது இங்கிலாந்து

அயர்லாந்திற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், அயர்லாந்து அணிக்குமிடையிலான ஒற்றை ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

டப்ளினில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அயரலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

2 விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அயர்லாந்து அணி சார்பாக அவ்வணியின் தலைவரும், ஆரம்பத்துடுப்பாட்ட வீரருமான வில்லியம் போர்ட்டபீல்ட் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் அயர்லாந்து அணி சார்பாக வில்லியம் போர்ட்டபீல்ட் 142 பந்துகளில் 112 ஓட்டங்களையும், ஜோன் மூனி 40 பந்துகளில் 27 ஓட்டங்களையும், நயல் ஓபிரையன் 39 பந்துகளில் 26 ஓட்டங் களையும், மக்ஸ் சொரென்சென் 17 பந்துகளில் 24 ஓட்டங்களையும், கெவின்ஓ பிரையன் 27 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக போய்ட் ராங்கின் 46 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

270 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 43 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மோசமான ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்ட இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களுடன் தடுமாறியபோது 5ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த ஒய்ன் மோரகன், ரவி போப்பாரா இருவரும் பிரிக்கப்படாத 226 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்திற்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஒய்ன் மோர்கன் 106 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 124 ஓட்டங்களையும், ரவி போப்பாரா 75 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், ஜேம்ஸ் ரெய்லர் 42 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அயர்லாந்து அணி சார்பாக ரிம் முர்ட்டாக் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இங்கிலாந்தின் ஒய்ன் மோர்கன் தெரிவானார்.



## டில்லி அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்க வீரர்

டில்லி டேர்டெவில்ஸ் அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவை சேர்ந்த கேரி கிர்ஸ்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

6ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட்டில் டில்லி டேர்டெவில்ஸ் அணி படுமோசமாக விளையாடி 16 லீக் ஆட்டங்களில் வெறும் 3இல் மட்டுமே வெற்றி பெற்று கடைசி இடத்திற்கு தள்ளப்பட்டது.

பலம் வாய்ந்த அணியாக களம் இறங்கிய போதிலும் இறுதிப்போட்டிக்கு ஒருமுறை கூட முன்னேறவில்லை. இந்த் நிலையில் தள்ளாடி வரும் அணியை தூக்கி நிறுத்துவதற்கான முயற்சியாக அணிக்கு புதிய பயிற்சியாளராக தென்னாபிரிக்க முன்னாள் வீரர் கேரி கிர்ஸ்டனை அணி நிர்வாகம் நியமித்துள்ளது.

இது தொடர்பாக டில்லி நிர்வாகம் 'டுவிட்டர்' இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் 'டில்லி அணியின் தலைமை பயிற்சியாளராக கிர்ஸ்டனை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீருடை விவகாரம்; ஆஸி.வீரருக்கு விசேட அனுமதி

அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் பவாத் அஹமட்டிற்கு அவரது அவுஸ்திரேலிய சீருடையில் மதுபான நிறுவனத்தின் இலட்சனையின்றி விளையாடுவதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


அவரது மத நம்பிக்கைகளுக்கு ஏற்பவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானைச் சேர்ந்த பவாத் அஹமட், அண்மையில் அவுஸ்திரேலியக் குடியுரிமையைப் பெற்றதோடு அவுஸ்திரேலியா சார்பாக சர்வதேச போட்டிகளிலும் தனது அறிமுகத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் அவரது மத நம்பிக்கைகளின் படி மதுபானப் பொருட்களை விளம்பரப்படுத்தும் சீருடையை அணிவது தவறானது என்பதால் அது குறித்து அவர் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்குத் தெரியப்படுத்தினார். இதன்படி, அவுஸ்திரேலிய அணியின் அனுசரணையாளர்களான விக்ரோறியா பிற்றர் பியர் இலட்சனையை அணியாமல் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு பவாத் அஹமட்டிற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை கருத்துத் தெரிவிக்கும்போது, "தாங்களும் தங்களது அனுசரணையாளரும் பவாத அஹமட்டின் மத நம்பிக்கைகளை மதிக்கினறோம். இதனால் இலட்சனையின்றி போட்டிகளில் பங்குபற்ற பவாத் அஹமட்டிற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர் ஹசிம் அம்லாவும் தனது மத நம்பிக்கைகள் காரணமாக அந்நாட்டின் அனுசரணையாளர் காஸில் பியர் இலட்சனையைத் தனது சீருடையில் அணிவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. வீரர்களின் அதிரடியில் பொசுங்கியது ஸ்கொட்லாந்து



ஸ்கொட்லாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலிய அணி, ஸ்கொட்லாந்திற்கெதிரான ஒற்றை ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

கிறேஞ் கிரிக்கெட் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கொட்லாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 362 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது விக்கெட்டுக்காக ஆரொன் ஃபின்ச், ஷோன் மார்ஷ் இருவரும் 38.2 ஓவர்களில் 246 ஓட்டங்களைக் குவித்ததோடு, 2ஆவது விக்கெட்டுக்காக ஷேன் வொற்சன், ஷோன் மார்ஷ் இருவரும் 9.3 ஓவர்களில் 101 ஓட்டங்களைக் குவித்தனர்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஷோன் மார்ஷ் 149 பந்துகளில் 151 ஓட்டங்களையும், ஆரொன் ஃபின்ச் 116 பந்துகளில் 148 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 24 பந்துகளில் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக இயன் வார்ட்லோ 2 விக்கெட்டுக்களையும், மஜித் ஹக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

363 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 43.5 ஓவர்களில் 162 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஓட்டமெதனையும் பெறாமல் முதலாவது விக்கெட்டையும், 2 ஓட்டங்களுடன் 2ஆவது விக்கெட்டையும் இழந்த அவ்வணி, தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக மற் மச்சான் 59 பந்துகளில் 39 ஓட்டங்களையும், மஜித் ஹக் 49 பந்துகளில் 25 ஓட்டங்களையும், கலம் மக்லியொட் 33 பந்துகளில் 24 ஓட்டங்களையும், கோர்டன் கௌடி 26 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஜோன்சன் 4 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் ஃபோள்க்னர் 2 விக்கெட்டுக்களையும், கிளின்ட் மக்காய், அடம் வோகஸ், பவாத் அஹமட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# பொன்சேகா இன்று முல்லைத்தீவு விஜயம்

(முல்லைத்தீவு)

ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா இன்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடும ஜனநாயக கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக நடைபெறும் பிரசாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றவுள்ளார்.

இப் பிரசாரக் கூட்டம் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் உதயசூரியன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எ-267)

## தனித் தமிழீழம்...

வேண்டும் என்று அழுத்தம் கொடுக்க தமிழ் நாட்டு தமிழர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

இலங்கைத் தமிழர்கள் தங்களின் பாதுகாப்புக்கும், தமது பிள்ளைகள் பாடசாலைக்குள் சென்று பாதுகாப்பாக வீடுகளுக்கு திரும்புவார்களா என்ற அச்சத்துடன் இருக்க வேண்டிய தேவை தற்போதில்லை.

விடுதலைப்புலிகள் தமது பிள்ளைகளை படையில் இணைத்து கொள்வார்கள் என்றும் அச்சம் கொள்ள தேவையும் இல்லை. எனினும் இது தமிழர்களுக்கு அதிகார பரவலாக்கம் தேவைப்படாது என்று அர்த்தமாகிவிடாது. ஜனநாயக ரீதியான அதிகாரங்கள் தமிழர்களுக்கு பகிரப்பட வேண்டும்.

பயங்கரவாதத்தை ஆதரித்த இந்திய அரசியல்வாதிகள் உட்பட இந்தியாவில் உள்ளவர்கள் தற் போது முதலை கண்ணீர் வடித்து வருகின்றனர்.

எந்த போரிலும் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் அவர்களை கேடயங்களாக பயன்படுத்துவதில்லை ஆனால், விடுதலைப்புலிகள் பொதுமக்களை கேடயங்களாக பயன்படுத்தினர்.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிராக மட்டுமே மனித உரிமை மீறல்கள் குறித்து தனியான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற யோசனை அபத்தமானது என்பது எனது நிலைபபாடு.

பயங்கரவாதிகளுடன் இணக்கப்பாட்டு பேச்சுவார்த்தைகள் நடத்துவது ஆபத்தான விடயம் என்றார். (எ-11)

## யாழ்.தளபதியின்...

மாகாண சபைத் தேர் தல் எதிர்வரும் 21 -ம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் கட்சியும் போட்டியிடுகின்றது.

நான் அறிந்த வரை ஐ.ம.சு. முன்னணியில் 22 கட்சிகள் ஏற்கெனவேயுள்ளன.

இந்நிலையில் ஹத்துருசிங்கவின் கட்சியும் 23 ஆவது கட்சியாக இணைந்து யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதாக அறிகின்றேன்.

மேலும் ஹத்துருசிங்கவின் கட்சி ஹத்துருசிங்கவின் சிந்தனையை முன்னெடுப்பதாகவும் மஹிந்த சிந்தனையையும் உள்ளடக்கி அதனையும் மீறி இராணுவ ஏதேச்சாதிகார சிந்தனையையும் முன்னெடுப் பதாகத் தெரியவருகிறது.

இது அரசாங்கத்தின் பிரச்சினை. எங்களுடைய பிரச்சினையல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.(எ-6)


## ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

### வருடாந்த மஹோற்சவம் - 2013

2 ஆம் நாள் திருவிழா



அனுசரணை:
இளம் சட்டத்தரணி,
கேசவன் சயந்தன்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

தெல்லிப்பழை
இந்து இளைஞர் சங்கம்,
தெல்லிப்பழை.

(சி-4608)


## யாழ்ப்பாணம் வர...

யுள்ளதாக தெரியவருகிறது.

ஹெரோயின் போதைப் பொருளை பாதுகாப்பாக வைத்திருக்கும் நோக்கில், இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்ட 250 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளில் 50 கிலோ கிராமை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

கொழும்பில் ஹெரோயின் போதைப் பொருள கையிருப்பு முடிந்த பின்னர், யாழில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் போதைப் பொருளை பயன்படுத்த இவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இந்த தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், நாட்டின் பல பகுதிகளில் ஹெரோயின் போதைப்பொருள்பதுக்கி வைக்கப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஹெரோயின் விற்பனை யின் மூலம் கிடைக்கும் பணத்தை தாவூத் இப்ராஹிம் என்ற மாஃபியா குழு தலைவரின் நிறுவனத்திற்குரிய வங்கி கணக்கில் வைப்பிலிட்டு வந்துள்ளதாகவும சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் பாகிஸ்தான் பாதாள உலக குழுவினர் சம்பந்தப்பட்டுள்ளதால், இலங்கை குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை விரிவுப்படுத்தியுள்ளது.

இது தொடர்பான விசேட கலந் துரையாடல நேற்றுமுன்தினம் பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்ககோன் தலைமையில் நடைபெற்றதுடன் இதில் போதைப்பொருள் தடுப்பு பிரிவு மற்றும் சுங்க திணைக்களத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (எ-11)

## மூவினமும்...

விட்டனர்.

யுத்தத்திற்கு பின்னர் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கத்திற்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அந்த சந்தர்ப்பத்தை அரசு தவறவிட்டது.

போரில் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினை, வடக்கு மாகாண மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக அரசு, அந்த பிரதேசத்தில் அரைகுறை இராணுவஆட்சியைமுன்னெடுத்தது.

வடக்கு மாகாண மக்களின் நிலபபிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாத சூழலில், அரசாங்கம் அம்பாந்தோட்டை, அனுராதபுரம் மாவட்டங்களில் இருந்து சிங்கள மக்களை அழைத்துச் சென்று அங்கு குடியேற்றியது. இதனால் பிரச்சினை மேலும் அதிகரித்தது.

இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவில்லை. அதுமட்டுமல்லாது வடக்கில் ஊடகவியலாளர் மீதும், ஊடகங்கள் மீதும தாக்குதல் நடத்தியது. வடக்கில், சட்டத்தையும ஜன நாயகத்தையும் உறுதிப்படுத்துவதற்கு பதிலாக அதனை இல்லாமல் செய்தது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவது தேசிய முக்கியத்துவமிக்கது என்பதைக் கருதி அரசாங்கம் செயற்படவில்லை.

இதனால் என்ன நடந்தது. தெற்கில் உள்ள சிங்கள அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்காததால், பிரபாகரன் தற்கொலை போராளி களை உருவாக்கி பாரிய ஆயுத படையை உருவாக்க நேர்ந்தது என்ற நிலைப்பாடு உறுதியாகியது.

சில தமிழர்கள் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டாலும் சிலர் அதனை ஏற்றுக் கொள்ள வில்லை. எனினும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிலைப்பாடு சரியானதே எனபதை அரசு கடந்த 4 வருடங்களில் தமிழ் மக்களுக்கு உறுதிப் படுத்தி காட்டியது.

தமக்கான அரசாங்கம் ஒன்றை அமைத்து கொள்ள வேண்டும் என்ற இனவாத திசை நோக்கி அரசாங்கம் தமிழ் மக்களை தள்ளியது.

இந்த சூழலை தமிழ் அரசியல் அமைப்புகள் பயன்படுத்தி கொண்டன.

அரசாங்கத்திடம் இருந்தே தமது தேவைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் மேற்குலக நாடுகளும் இந்தியாவும் இருக்க வேண்டும் என்று வடபகுதி மக்கள் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர் என்றார். (எ-11)

# தெல்லிப்பழை வைத்தியசாலை விடுதிகளில் மூட்டைப்பூச்சி!

## நோயாளர்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உள்ள சில விடுதிகளில் மூட்டைப் பூச்சியின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக நோயாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வைத்தியசாலையின் உளநல விடுதியிலேயே மூட்டைப்பூச்சியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதாகவும் இதனால் அங்கு தங்கி நின்று சிகிச்சை பெறமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் தொடர்புகொண்டு கேட்ட போது எமது வைத்தியசாலையில் மூட்டைப் பூச்சிகளின் தாக்கம் உளநல சிகிச்சை பெறும் நோயாளர்கள் தங்கியுள்ள விடுதியிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது.

நோயாளர்கள் மற்றும் பணியாளர்களின் முறைப்பாட்டையடுத்து மூட்டைப் பூச்சியை அகற்றுதவற்கான நடவடிக்கைகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் அதன் வளர்ச்சி வேகமாகக் காணப்படுவது அதனை அழிப்பதற்கான முயற்சியும் தோல்வியடைந்துள்ளது.

எனினும் அதனை அழிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## நவநீதம்பிள்ளைக்கு...

நவிபிள்ளையை சந்தித்தவர்கள் இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஐ.நா. அமைப்பிற்கு கருத்து வெளியிட்ட காரணத்திற்காக எவரும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

சகல மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பணிகளும் ஐ.நா சபையால் மதிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நவநீதம்பிள்ளையினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்தவர்களை இலங்கைப் படையினர் விசாரணைக்கு உள்ளாக்குவதாக வெளிவந்திருக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கம் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என மனிதவுரிமை அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கையில் ஒருவார கால விஜயத்தை தான் மேற்கொண்டிருந்த காலப்பகுதியில் தன்னைச் சந்தித்த குடும்ப உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டதாக நவநீதம் பிள்ளை தன்னுடைய பயணத்தின் இறுதியில் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

ஐ.நாவுடன் பேசியவர்கள் பழிவாங்கப்படுவது மிகவும் கவனத்துக்குரிய ஒரு விடயம் எனத் தெரிவித்த அவர், இது தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு தான் முறையிடப் போவதாகவும் கொழும்பில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்தபோது அவர் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

## முல்லைத்...

சடலம் பிரேத பரிசோதனைக்காக மாஞ்சோலை வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)


# 31-ம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்

தோற்றம்
1955 - 01 - 14

மறைவு
2013 - 08 - 09



## சுப்பிரமணியம் ஆனந்தராஜா

09.08.2013 அன்று அமரத்துவமடைந்த K.K.S ஐ பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆனந்த ராஜா அவர்களின் பிரிவால் துயருற்றிருந்த எமக்கு அனைத்து வழிகளிலும் ஆறுதல் வழங்கியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

08.09.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00 மணியளவில் தெனியம்பை அந்தியேட்டி மடத்தில் நடக்கவிருக்கம் கிரியைகளிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(C-4612)

***இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.***

ஐயனார் வீதி,
பருத்தித்துறை

மனைவி, பிள்ளைகள் : ஜெயந்தி, ரகு, அபி
சகோதர சகோதரிகள் : சிவராஜா, வண்ணம், சாந்தி

# ஆனையிறவில் விபத்து....

விபத்துக்குள்ளாகியுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்று இராணுவத்தினர் பயணித்த தண்ணீர் பவுஸரை ஆனையிறவு பகுதியில் வைத்து முந்திச் செல்ல முற்பட்டபோது அந்த பேருந்து உழவு இயந்திரத்திற்கு பின்புறமாக மோதியுள்ளது.

தனியார் பேருந்து மோதியதால் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பவுஸர் பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துடன் மோதியுள்ளது.

இதனால், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் தண்ணீர் பவுஸரில் பயணித்த இராணுவ வீரர் ஒருவர் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளதுடன் கொழும்பு நோக்கி பயணித்த அரச பேருந்தில் பயணித்தவர்களில் ஏழுபேர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 40 பேர் வரையில் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)


ENGLISH & MUSIC CLASSES
ஆங்கிலம் மற்றும் இசை வகுப்புக்கள்

யாவருக்குமான "Spoken English with Grammer" அடிப்படையில் இருந்து மிகவும் இலகுவான முறையில் வீடுகளுக்கு வந்து (Home Visiting) கற்பிக்கப்படும். UK விசாவிற்கான KET மற்றும் IELTS பரீட்சைக்கு ஏதுவாக கற்பிக்கப்படும். மற்றும் ஓகன், கிற்றார், வாத்தியங்களும் கற்பிக்கப்படும். [ Western and Eastern Music ] (3860)

தொடர்புகளுக்கு : 0778180264


# ஜெனிவாவில் இலங்கையர் தீக்குளிப்பு

ஜெனிவாவில் இலங்கையர் ஒருவர் தீக்குளித்துள்ளார். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸா தெரிவித்துள்ளனர். இந்நபர் காப்பாற்றப்பட்டு அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இவர் இலங்கை தமிழராக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இவருக்கு அருகிலிருந்து மீட்கப்பட்ட தடயங்கள் இதனை உறுதி செய்வதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்த பகுதியில் எரிந்த அடையாளங்கள் காணப்பட்டன.

இவர் யார் என்பதையோ இவரிடமிருந்து மீட்கப்பட்ட தடயங்களையோ பொலிஸார் இது வரை வெளியிடவில்லை.

இதேவேளை, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(எ-11)


சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள்

உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், A/L முடித்தவர்களுக்கும், மிக இலகுமுறையில், குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பயிற்சியினை முடித்துக் கொள்ள...

COMPUTER SALES, SERVICE & REPAIR

சகல விதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor, LED TV, Printer, UPS என்பன உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் தருகின்றோம்.

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

NORTH LEAD No : 328, Staly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்) (இ-4610)

Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460


## இலங்கை....

யுள்ளார்.

புவிசார் அரசியலும் இந்திய மூலோபாயமும் என்ற தலைப்பில் உரையாற்றிய பேராசிரியர் பாரத் கர்நாட்,

பாகிஸ்தானுடன் மட்டுமன்றி சீனாவுடனும் கூட, இந்தியா பாதுகாப்பு ரீதியாக செயற்பாட்டு நிலையில்இருக்கவேண்டும்

பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் உள்ளிட்ட ஏனைய அண்டை நாடுகளிலும் சீனத் தலையீடு அதிகமாக உள்ள நிலையில், இந்தியா எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-11)


வடமராட்சியில்....

Special English Class

ஆசிரியர் திரு. ஜோதி

A/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவுகள்

ஆரம்பம் - 07.09.2013 சனிக்கிழமை

Spoken English, Grammar, Vocabulary ஆகிய அனைத்துத் திறன்களையும் கொண்ட முழுநிறைவான கற்கைநெறி.

மேலும் O/L பரீட்சையில் ஆங்கில பாடத்தை திரும்பவும் எடுக்கவுள்ள மாணவர்களுக்கான விசேட பயிற்சிகளும் வழங்கப்படும்.

பருத்தித்துறையில் - 3.00P.M
Oxford English Academy
P.K Lane, Point Pedro.

நெல்லியடியில் - 4.00P.M
Everest Academy
Vathiry, Karaveddy.
(அஜந்தாஸ் ஸ்ரூடியோ ஒழுங்கை)

அனுமதிக்கு முந்துங்கள்.



Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

★ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.

★ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.

★ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

Vivekananda Academy

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393 (C-4611)



NEW SCIENCE WORLD

VICTORY MUST

Navalar road junction , Brown road , Jaffna.

Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

For 2013 A/L....

Day Classes

| | |
|---|---|
| Physics | : R. Kugen & R. Kumaran |
| Chemistry | : Dias & S. Sivakumar |
| Biology | : S. Ponthivakaran & S. Umashankar |

(C-4607)

From 09-09-2013 (Monday) at 09.30 am



After A/L...

யாழ் மற்றும் நெல்லியடி நகரங்களில்

BCAS Campus வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்

Seminar & Counseling 2013

போட்டி நிறைந்த நவீன உலகின் சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் GCE A/L இன் பின்னர் உங்கள் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி என்பவற்றை எவ்வாறு திட்டமிடலாம் என்பது பற்றிய பொறுமதிமிக்க நேரடி ஆலோசனைகளை வழங்குவதற்காக அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்கள் உங்கள் நகரங்களிலேயே உங்களைச் சந்திக்கின்றார்கள். உயர்கல்வித் துறையில் 14 வருடத்திற்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சர்வதேச அங்கீகாரம் பெற்ற இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனமான BCAS Campus வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு



- A/L பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையான காலப்பகுதியை உயர்கல்வி வெற்றிக்காக எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது?
- நவீன உலகளாவிய தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய புதிய தொழில்வாய்ப்புகள் எவை?
- உங்களது தனிப்பட்ட திறன் மற்றும் ஆர்வம் என்பவற்றுக் கேற்ப எதிர்கால தொழில் இலட்சியங்களை எவ்வாறு வரையறை செய்வது?
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக் கழக வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு உங்கள் உயர்கல்வி துறையினைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் என்ன?
- உலகளாவிய தொழிற்சந்தைகளில் உயர்வருமானம் பெறும் தொழில்வாய்ப்புகளை பெறுவதற்கான வழிமுறைகளும் அதற்காக வேண்டப்படும் திறன்களும் எவை?
- நீங்கள் உயர்கல்வியைத் தொடர்கின்ற போது அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கற்றல் நுட்பங்கள் யாவை? அதற்கேற்ப உங்கள் நினைவாற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?
- உயர்கல்வி மற்றும் எதிர்கால தொழில் வெற்றிகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் உங்கள் ஆங்கில மொழித்திறனையும் ஏனைய மென் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கான மிகச் சிறந்த வழிகள் என்ன?
- நீங்கள் பல்கலைக் கழகமொன்றில் உயர் கல்வியைத் தொடர்கின்ற காலப்பகுதியில் ஏனைய தொழில்சார் (Professional Qualification) கல்வித் தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் என்ன?

யாழ்ப்பாணத்தில்...

செப்டம்பர் 07 ஆம் திகதி சனி
வீரசிங்கம் மண்டபம்
மு.ப.09.00 - பி.ப 01.00

நெல்லியடியில்...

செப்டம்பர் 07 ஆம் திகதி சனி
நெல்லை முருகன், திருமணமண்டபம்
பி.ப. 02.00 - 05.00

இக் கருத்தரங்கில் எமது அனுபவமிக்க உயர்கல்வி ஆலோசகர்கள் மாணவர்களும் பெற்றோர்களும் தனிப்பட்ட முறையில் சந்தித்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அனுமதி முற்றிலும் இலவசம்

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

அழையுங்கள்: 0777 102131


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.